ஏழாவது இதழ் தை - ஆனி 2023

# கலை வரலாறு

காண்பியக்கலை, காண்பியப் பண்பாடு, மரபுரிமை என்பவற்றுக்கான ஆய்வேடு

ஏழாவது இதழ் தை - ஆனி 2023

# கலை வரலாறு

காண்பியக்கலை, காண்பியப் பண்பாடு, மரபுரிமை என்பவற்றுக்கான ஆய்வேடு

கலைவட்டம், நுண்கலைத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கலை வரலாறு: காண்பியக்கலை, காண்பியப் பண்பாடு, மரபுரிமை என்பவற்றுக்கான ஆய்வேடு

இதழாசிரியர்

பேராசிரியர். தாமோதரம்பிள்ளை சனாதனன்

உதவி

பிரிந்தா குலசிங்கம்

ஸ்ரீபன் கிருபாலினி

சப்னா இக்பால்

சுஜிதா சிறிதரன்

- கட்டுரைத் தொகுதி ஒன்று என்ற வகையில் அனைத்து உரிமைகளும் கலைவட்டத்திற்கும் நுண்கலைத்துறைக்கும் உரியது.
- சகல மூலக் கட்டுரைகளினதும் உரிமை அந்தந்தக் கட்டுரைகளின் மூல ஆசிரியர்களுக்கு உரித்தானதாகும்.
- சகல மொழிபெயர்ப்புகளினதும் உரிமை மொழிபெயர்ப்பாளர்களுக்கு உரியதாகும்.

ஏழாவது இதழ் தை - ஆனி 2023

# கலை வரலாறு

காண்பியக்கலை, காண்பியப் பண்பாடு, மரபுரிமை என்பவற்றுக்கான ஆய்வேடு

## உள்ளடக்கம்

செவ்வியலுக்கும் சனரஞ்சகத்துக்குமிடையில்: யாழ்ப்பாணத்தில் நாதசுவர இசையின் வர்த்தகமயமாக்கல்

**சிவகுமாரன் கஜவதனன்** **1-25**

யாழ்ப்பாணக் கலை வரலாற்றில் ஆறுமுகநாவலர்

**சிவாஜினி திலகநாதன்** **26-44**

யாழ்ப்பாணத்தில் கேணிகள்: வடிவமைப்பு மாற்றங்கள்

**சுஜிதா சிறிதரன்** **45-70**

ஈழத்தில் நாட்காட்டிப் படங்களும் காட்சிப் பண்பாடும்

**வசந்தினி ராஜலிங்கம்** **71-90**

"தேனீ தனக்காகத்தான் தேனை உருவாக்குகிறதே தவிர விற்பனைக்காக அல்ல" நேர்காணல்: சந்திரகுப்த தேனுவர

**பிரிந்தா குலசிங்கம், றூபவரன் யசோதரன்** **91-113**

# “தேனீ தனக்காகத்தான் தேனை உருவாக்குகிறதே தவிர விற்பனைக்காக அல்ல” நேர்காணல்: சந்திரகுப்த தேனுவர

பிரிந்தா குலசிங்கம், றூபவரன் யசோதரன்

**அறிமுகம்**

இலங்கையில் நன்கு அறியப்பட்ட சமகாலக் காண்பியக் கலைஞர்களுள் ஒருவரான சந்திரகுப்த தேனுவர கொழும்பு கட்புல மற்றும் அரங்கக் கலைகள் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகக் கடமையாற்றி வருபவர். கொழும்பின் களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்திருந்த அழகியல் கற்கைக்கான நிறுவனத்தில் ஓவியத்தில் இளம் நுண்கலைமாணிப் பட்டத்தையும் சோவியத் ஒன்றியத்திலுள்ள மாஸ்கோ அரசு நிறுவனத்தில் முது நுண்கலைமாணிப் பட்டத்தையும் பெற்றவர். 1990 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கையில் நடைபெற்ற வன்முறைகளுக்கு எதிர்வினையாற்றிய காண்பியக் கலைஞர்களுள் முதன்மையானவர்.

இவர் அரசியல் ரீதியான உள்ளடக்கங்கள் கொண்ட படைப்புகளை அதிகமாக உருவாக்கியுள்ளார். 1983 இல் இடம்பெற்ற ஜுலைக் கலவரத்தின் வன்முறைகளைக் கண்டித்து அதனை நினைவுகூரும் விதமாக 1990களிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஜுலை மாதத்தில் கண்காட்சியை முன்னெடுத்து வருகின்றார். இவருடைய சுயாதீனமான நிறுவனமான 'விபவி' ஊடாக ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலைக் கல்வியைப் பெற்றுள்ளார்கள். அவரது அரசியல் மையப்பட்ட கலைச் செயற்பாட்டின் உச்ச வெளிப்பாடாக 2019 இல் நிகழ்ந்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச ஒரு வேட்பாளராகப் போட்டியிட்ட சந்தர்ப்பத்தில் அவர் செல்லுபடியான இலங்கைப் பிரஜாவுரிமையைக் கொண்டிருக்கவில்லை எனும் வகையில் தேர்தலில் போட்டியிடத் தகுதியில்லாதவர் என அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தவர். இச்செயற்பாடு ஒரு கலைஞனுடைய அரசியல் வகிபாகம், சமூக அக்கறை தொடர்பான இருப்பு என்பன தொடர்பான பல கேள்விகளைக் கொண்டுவந்தது. கலைஞன் வெறுமனே கலையினூடாக மட்டுமல்லாது வேறு வழிமுறையிலும் குரல் கொடுக்கவேண்டிய தேவையை உணர்த்திய இச்செயற்பாடு இலங்கை மட்டுமல்லாது முழு உலகத்தையும் திரும்பிப் பார்க்க வைத்தது. இவர் இம்மனுத்தாக்கலுக்குப் பின்னர் உயிர் அச்சுறுத்தல்களையும் சந்திக்க நேர்ந்தது.

**உங்களுடைய பார்வையில் கலை என்றால் என்ன?**

கலை என்பதற்குப் பலதரப்பட்ட வரைவிலக்கணங்கள் உண்டு. என்னுடைய கருத்துப்படி நான் என்ன செய்கிறேனோ அதுவே கலையாகும். அதாவது குறிப்பிட்ட ஒரு வேலையை அல்லது

விடயத்தை அழகியல் உணர்வோடு அல்லது சமூக அரசியல் இணைந்த அழகியல் பண்டமாக உற்பத்தி செய்வது கலையாகும். அதுவே மிக முக்கியமானதாகும். சில நேரங்களில் கலையை அரசியல் தன்மை குறைந்ததாகவும் அழகியல் உணர்வு கொண்டதாகவும் கலையுலகு என அழைக்கப்படும் தரப்பினர் பார்க்கின்றனர். குறிப்பாக அழகியல் தன்மை நிறைந்த சமூகப் பிரச்சனைகளிலிருந்து விலகிய ஒன்றாகக் கலை அணுகப்படுகின்றது. ஆயினும் அது கலைஞருடைய தனிப்பட்ட விருப்புவெறுப்பின் பாற்பட்ட தெரிவே ஆகும். கலைஞர் எப்போதும் தனக்கான கலையையும் அதற்கான அழகியல் தேர்வையும் உடையவராகக் காணப்படவேண்டும். நீங்கள் கலைஞராக இருக்கும் பட்சத்தில் உங்களுடைய சொந்த வரலாற்றைக் கட்டமைப்பதனுடாக உங்களுக்கான கலையை உருவாக்குகிறீர்கள்.

கலைஞர் என்பவர் சித்தார்த்தன் (புத்தர்) போல் பிறப்பவர் அல்ல, அவர் ஒரு தொடர்ச்சியான பயிற்சி மற்றும் அதற்கான வரலாறு, கலையறிவு, சமூக அறிவு, அரசியல் தேடல் என்பவற்றைக் கொண்டு பெறுகின்ற அனுபவத்தினை வெளியீடு செய்பவர். கலையில் அறிவு பிரதானமாகத் தேவையானது என்பது எனது கருத்தாகும். அதுவே கலைஞரை நிர்ணயிக்கும். இல்லாவிடின் சாதாரண மக்களைப் போல கலைப்பொருள் சாதாரண பொருளாகப் பார்க்கப்படும். அதனை வேறு பிரித்துப் பார்க்க முடியாத மனநிலையைக் கொண்டதாகவே அமையும். கலைஞர் தன்னைப் பற்றியும் தன்னுடைய சமூகம், சுய கருத்துகள் பற்றியும் பல தரப்பட்ட நோக்குநிலைகளைக் கொண்டவராகச் செயற்பட வேண்டும். பிரக்ஞையுடன் சமூகத்தைப் பார்க்க வேண்டும் என நினைக்கிறேன்.

**நீங்கள் எவ்வாறு கலையையும் அரசியலையும் கையாளுகிறீர்கள்? ஒரு கலை வடிவத்தை உருவாக்கும் செயன்முறையில் உங்கள் மனதில் முதலில் வருவது அரசியல் பிரச்சனையா? அல்லது கலைத்துவம் சார் கற்பனையா?**


அரசியல்சார் விடயங்களும் கலையில் வெளிப்படுத்தப்படுகின்றன. சில நேரங்களில் எந்த ஓர் அர்த்தமும் இல்லாத கலை வடிவங்களும் வருகின்றன. ஆனால் அவற்றைப் பார்ப்பதும் அவை தொடர்பாகச் சிந்திப்பதும் மிக முக்கியமான ஒன்றாகும். சில நேரங்களில் மக்கள் சாதாரணமாகப் பார்ப்பதுபோல் கலையைப் பார்க்கமாட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். பார்த்தல்–சிந்தித்தல் இரண்டும் இணைந்திருக்க வேண்டும். அத்தகைய செயல்முறை உங்கள் கலை உருவாக்கத்திற்குப் பயன்படும். கலை வடிவங்களை இரசிக்கப் பயிற்றுவித்தல் கலையை வளர்க்க ஆதாரமாக இருக்கும். பல்வேறு கலை வடிவங்களைப் பார்த்தல் முக்கியமான செயன்முறையாகும். அவை அழகாகவோ அல்லது அசிங்கமாகவோ இருக்கலாம், நீங்கள் பார்த்த விடயங்களுக்குக் காலப்போக்கில் நீங்கள் எதிர்வினையாற்றுகிறீர்கள். உங்கள் மனம் அதற்கு எதிர்வினையாற்றுகிறது. இல்லையெனில் இது உங்களுக்குள் சென்று உள்ளேயிருக்கும் ஒரு காட்சி ஞாபகமாக இருக்கும். காலப்போக்கில் கலையாக வெளிவருகின்ற ஓவியம், சிற்பம், தாபனக்கலை, விளக்கப்படம், திரைப்படம் போன்ற எந்தக் கலை வடிவங்களாகவும் அது இருக்கலாம். எனவே படைப்புகளை விமர்சனரீதியாக எதிர்கொள்ள வேண்டும். விமர்சனமும் சிந்தனையும் மிகவும் முக்கியமானதாகும்.

உங்களது சிந்தனைக்குள் கலையின் மூலக் கூறுகளான நிறங்கள், கோடுகள். இழைமங்கள், வடிவங்கள், ஒழுங்கமைப்பு போன்றவற்றைப் பிரயோகிக்கலாம். வெவ்வேறு சொற்களைச் சேர்த்து வெவ்வேறு வாக்கியங்களை உருவாக்குவது போல நீங்கள் ஒரு கலையை உருவாக்கிக்

கொள்வதன் மூலம் ஒரு புதிய மொழியை உருவாக்குகின்றீர்கள். சில நேரங்களில் வெறும் வார்த்தைகள் சேர்ந்து ஒரு வாக்கியத்தை உருவாக்காது. கவிஞர் ஒரு வாக்கியத்தை எழுதும் விதம் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டது. இலக்கியங்கள் எழுதுபவர்களைப் போல காண்பியக் கலைஞர்களுக்கு நிறம், வடிவம் சுற்றியுள்ள தொகுதி போன்ற சொந்தக் காட்சி மொழி உள்ளது. அதிலிருந்து வேறுபட்ட அர்த்தங்கள் புரிகின்றது. நீங்கள் கலை வடிவத்தை மறுபரிசீலனை செய்யும் போது அது ஒரு அர்த்தமுள்ள கலையாக மாறும்.

**உங்களுடைய ஆரம்ப காலப் படைப்புகளில் அரசியல் முரண்பாடுகளை முன்வைத்தமைக்கான பின்னணி பற்றிக் குறிப்பிட முடியுமா?**

இரண்டு கட்டமாக என்னுடைய படைப்புகளைப் பார்க்கிறேன்: ஆரம்ப காலப் படைப்புகள் மற்றையது அண்மைக் காலப் படைப்புகள். 1991, 1992 இல் ரஷ்யாவின் மொஸ்கோவிலுள்ள சுரிக்கோவ் அரச கலை நிறுவனத்தில் படிப்பை நிறைவு செய்த காலத்தில் "கண்ணாடிச் சுவர்" எனும் ஓவியத்தினை வரைந்தேன் *(படம் 1)*. அந்தக் காலத்தின் அரசியல் நிலவரத்தைப் பிரதிபலித்த இப்படைப்பு 90களில் உருவாகிய இளம் கலைஞர்களுக்கு உந்துசக்தியாக இருந்தது. வெளிப்பாட்டுவாதம், அரூபவாதம், அரூப வெளிப்பாட்டுவாதம் என்பவற்றை உள்ளடக்கியதாக அது அமைந்தது. நான் கொழும்பில் மாணவனாக இருந்த, ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆட்சிக் காலத்தில் புதிய அரசியலமைப்பு முன்வைக்கப்பட்ட வேளை அதற்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம் நிகழ்த்தினர். அவ்வாறு வீதியில் இறங்கிப் போராடிய என்னுடைய பல்கலைக்கழக நாட்களின் நினைவுகளைப் பேசும் படைப்பாக இது அமைந்தது. இந்த மாணவப் பருவ அனுபவங்கள் இவ்வாறான படைப்புகளுக்கான தாக்கமாக அமைந்தன.



*படம் 1: கண்ணாடிச் சுவர், 1992, கன்வஸில் எண்ணெய் வர்ணம். புகைப்படம்: கலைஞரின் சேகரிப்பு.*

எல்லா விதமான வெளிப்பாடுகளும் முடக்கப்பட்டிருந்த சூழலைக் கொண்டிருந்த காலம் அது. இசை நிகழ்ச்சிகள் மறுக்கப்பட்டன, மேடை நாடகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது, பொது வெளியில் சுவரொட்டிகள் ஒட்டத்தடை. 'விளம்பரம் ஒட்டாதீர்கள்' என்ற வாசகம் எல்லாச் சுவர்களிலும் எழுதப்பட்டிருந்தது. சில இளைஞர்கள் தடைகளை மீறிச் சுவர்களில் எழுதினார்கள். ஒன்றன் மேல் ஒன்றாக எழுதப்பட்ட எழுத்துகள், நிலத்தில் வைக்கப்பட்ட பெயின்ற் வாளி போன்றவற்றைக் கொண்ட ஒரு படைப்பை உருவாக்கியதன் மூலம் அந்த வாளி வைத்திருந்த

நபருக்கு அல்லது இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கேட்கிறேன். அவர்கள் கைது செய்யப்பட்டோ காணாமலாக்கப்பட்டோ இருக்கலாம்.

**தனிப்பட்ட உங்களது வாழ்க்கை உங்களது படைப்புகளில் தாக்கம் செலுத்தியிருக்கிறதா?**

நான் தொடர்ந்து தாய்மாரை உள்ளடக்கமாகக் கொண்ட படைப்புகளைச் செய்து வருகின்றேன். தற்போது இறுதியாக நிகழ்த்திய கண்காட்சியிலும் தாயுருக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. எனது சொந்தப் படைப்புகளை மீளச் செய்தல், அவற்றை மேல் விசாரணை செய்தல் போன்ற நடவடிக்கைகளைச் செய்து கொண்டு வருகின்றேன். அதாவது குறித்த காலத்திற்குப் பொருத்தமாக இருந்தால் எனது படைப்பை, மீள் படைப்பு செய்து வருகின்றேன். ஏழு வயதில் என்னுடைய அம்மாவை இழந்தேன். எனது படைப்பிற்குப் பின்னால் எனது தாயார் பற்றிய ஏக்கம், நினைவுகள் வெளிப்படும். ஒவ்வொரு காலகட்டத்திலும் படைப்புகளை உருவாக்கும் போது அவை அவற்றின் காலத்தின் வடிவத்தை எடுத்துக் கொள்கின்றன. அவ்வாறு அக்காலகட்டங்களின் சூழ்நிலைக்கு எதிர்வினையாற்றும் வகையிலிருப்பதனால் அது எனது தாயார் பற்றியது என்பதை விட அந்தக் காலகட்டம் பற்றியதாக இருக்கிறது.

**உங்களுடைய தந்தை எவ்வாறு உங்களது படைப்புகளில் தாக்கம் செலுத்தியிருக்கிறார் என நினைக்கிறீர்கள்?**

அவர் அமைதியானவர் அதிகம் பேசுபவர் அல்ல. மிகவும் ஒழுக்கமானவர். அது எனது ஆளுமையில் தாக்கம் செலுத்தியிருக்கக் கூடும். காலியில் நான் பிறந்தேன். நாம் அம்பாறையில் வசித்திருந்த வேளை தந்தை அங்கத்தவராக இருந்த கம்யூனிச கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகை, சோவியத் சஞ்சிகைகள் போன்றன எங்கள் வீட்டிலும் கிடைக்கும். வீட்டில் பெரிய நூலகம் உண்டு. 1965 இல் அக்கால அரசாங்கத்தால் எனது தந்தை வேலையிலிருந்து நீக்கப்பட்டார். பாடசாலை வேலையிலிருந்து நீக்கப்பட்ட வேளையிலும் கூட எனது ஓவியப் பயிற்சிக்கான மூலப் பொருட்களைப் பெற்றுத் தந்தார்.

**மொஸ்கோவில் உங்களது கலைக் கல்வி எவ்வாறு உங்களில் தாக்கம் செலுத்தியது?**

1985–1992 வரை ஏழு வருடங்கள் மொஸ்கோவில் படித்தேன். பின்னர் 1994–1997 வரையான மூன்று வருடங்கள் அங்கே சென்று மீளப் படித்தேன். சோவியத் யூனியன் உடைவு 1992 இல் நிகழ்ந்தது. புதிய சோசலிசம் உருவானமையை நான் விரும்பினேன். அத்தகைய மாற்றத்தை அங்கே நான் பார்த்தேன். அது படைப்பாளிகளுக்குப் பல வாய்ப்புகளை வழங்கியது. எனது முதலாவது கலைக் கல்வியின் ஆரம்பம் கொழும்பு. அரூப வெளிப்பாட்டுவாதமே கொழும்பில் மிகச் சிறந்த கலைப் பாணியாக அப்போது இருந்தது. இந்நிலவரத்தில் உருவக் கலை கொண்டாடப்படவில்லை. நான் எப்போதும் உருவங்களைப் படைப்பில் கொண்டுவரவே விரும்பினேன். ரஷ்யாவிற்குச் சென்றமைக்கு அதுவும் ஒரு காரணம்.

மொஸ்கோ கல்வி மிகவும் ஒழுங்கமைப்பானது. அனேகமான நாட்களில் ஒரு நாள் பன்னிரண்டு மணித்தியாலங்கள் வீதம் கற்றதும் உண்டு. முதலாவது வருடம் மொழி படித்தோம். மூன்றாவது வருடத்திலிருந்து சலகோவ் மாஸ்டரிடம் ஸ்ரூடியோவில் பயிற்சி செய்தேன். ஆறாவது வருடம் முழு சுதந்திரத்துடன் படைப்பாக்கம் செய்ய முடிந்தது.

புத்தகங்களை வாங்கி வாசிப்பதுடன் அரும்பொருளகங்களுக்குச் சென்று பார்வையிடுவதும் வழமையாகக் கொண்டிருந்தேன். இறுதி வருடம் எனது அறையில் இடமில்லாததால் அறை நண்பர் என்னைப் புத்தகங்கள் வாங்க வேண்டாம் என்று கூறுமளவுக்கு அரசியல், கலை ஆங்கில, ரஷ்ய மொழி நூல்களைச் சேகரித்திருந்தேன். கன்டின்ஸ்கி, சோவியத் ஓவியர்களின் படைப்புகளின் சேகரிப்புகளைப் பார்த்திருக்கிறேன். ரேர் மியூசியம், ரஷ்ய மியூசியம் போன்ற அங்குள்ள அனைத்து கலைக் கூடங்கள், அரும்பொருட்காட்சியகங்களுக்கு பிரபலமான படைப்பாளிகளின் படைப்புகளைப் பார்ப்பதற்குச் சென்றிருக்கிறேன். எல்லா சர்வதேசப் படைப்பாளிகளின் படைப்புகளும் ரஷ்யாவில் காட்சிப்படுத்தப்பட்டன. அங்கே கலைக் கூடங்கள், அரும்பொருளகங்கள், புத்தகக் கடைகள் எல்லாவற்றிலும் வரிசையில் நின்று போகும் அளவுக்கு சனக் கூட்டம் இருக்கும். அவற்றிற்காகக் காத்திருத்தல் என்பது அவர்களது கலாசாரம். மெட்றோவில் பயணிக்கையில் 2–3 புத்தகங்களையும் வரைதல் புத்தகத்தையும் எடுத்துச் செல்வது வழமை. சோசலிசமோ அல்லது பின்னர் வந்த சோசலிசமோ திரையரங்குகளுக்கு வசதி வாய்ப்பளித்தது. பல சர்வதேசத் திரைப்படங்கள், ரஷ்யத் திரைப்படங்கள், சிறப்பான நிகழ்ச்சிகள் எல்லாம் பார்க்க முடிந்தது. "உங்களுடைய நேரத்திற்கு நீங்கள்தான் பொறுப்பு. கலைப்படைப்புகள் செய்வதற்கு மனம் ஒட்டவில்லையென்றால் நல்ல மனநிலைக்காகக் காத்திருக்காது ஸ்ரூடியோவிற்குச் செல்லுங்கள் எதையேனும் கண்டுபிடியுங்கள்" என எனது பேராசிரியர் கூறுவார்.

**ரஷ்யாவில் உருவக் கலைக் (figurative art) கல்விக்கே முக்கியத்துவம் இருந்தது என்கிறீர்கள். உருவக் கலை அனுகுமுறைக்கு எதிர்மாறாக கருத்துருவுக்கு முதன்மை தரும் முழுவதும் மாறுபாடான சமகாலக் கலை வகைக்குள் உங்களது கலைப் போக்கு பிரதானமாகச் செல்வது எவ்வாறு நிகழ்ந்தது?**

உருவக் கலையை நாம் கற்க வேண்டும். அது ஒரு கற்றல் படிநிலை, அதையே நான் மேற்கொண்டேன். என்னுடைய தூரிகைத் தடங்களைக் கண்டு எனது ஆசிரியர்கள் பாராட்டினர். நான் ஒரு வர்ணவாதி. ஏனைய தெற்காசியப் பின்னணியுள்ள ஓவியர்களை விட எனது ஓவியங்களிலே அதிகளவு வர்ணங்களைப் பார்க்க முடிந்தது. நாம் வெப்ப வலய நாடுகளிலிருந்து வருவதால் எம்மிடையே பல வர்ணங்களிருக்கும். அதனால் எனது ஓவிய ஒழுங்கமைப்பிற்கு எந்தக் கட்டுப்பாடும் இருக்கவில்லை. ஓவியம் அமைப்பதில் எனக்கு சுதந்திரம் இருந்தது. எப்போதும் ஓவியத்திற்கான மாதிரி நபர்களை (models) வரைவதிலிருந்து எமது பாணியைக் கண்டுபிடிப்பதாக இருக்கும். 1992இல் மொஸ்கோவில் "மொஸ்கோ ஓவியங்கள்" எனும் தலைப்பில் கண்காட்சி ஒன்றை ஒழுங்கு செய்து அதுவரை செய்த எனது சகல படைப்புகளையும் காட்சிப்படுத்தினேன். இந்தக் காலகட்டத்தை நிலைமாறும் காலகட்டம் என்பேன். ஏனெனில் அக்கடமிக் பாணி, செந்நெறி உலகு, நவீன கலை, அரூபக் கலை போன்ற வெவ்வேறுபட்ட கலைப் பாணிகளுடன் நான் போராடிய காலம் அது.

1997 இல் என்னுடைய வகை எனக்கூறத்தக்க பீப்பாய்வாதம் போன்ற ஒரு கலை மொழிக்குள் சென்றடைந்தேன். அவை அரசியற் தனமானதாக இருந்தன. எனது ஆரம்ப காலப் படைப்புகளும் அரசியற் தனமானவை தான். ஆனால் அவை யதார்த்தப் பாணியில் உருவம் மற்றும் வெளிப்பாட்டுப் பண்பிலான கலவையான கலைத்துவ வெளிப்பாடாக அமைந்திருந்தன.

**உங்களுடைய ஆசிரியர்கள் கருத்துருவக் கலை, சமகாலக் கலை போன்றவற்றைக் கற்பித்தார்களா? எவ்வாறு இந்தக் கலைப் பயிற்சிக்குள் உங்களால் வந்தடைய முடிந்தது?**

இல்லை. அவர்கள் இவ்வகைக் கலைப் போக்கைக் கற்பிக்கவில்லை. இவற்றைக் கண்டுபிடிப்பது எமது வேலையாகவே இருந்தது. புதிய படைப்புகள் ரஷ்யாவில் காட்சி செய்யப்படும்போது அவற்றை என்னால் பார்க்க முடிந்தது. மனப்பதிவுவாதிகளின் கண்காட்சிகளைப் பார்த்திருக்கிறேன். அக்கடமிக் பாணியிலமைந்த உருவம்சார் படைப்புகளைச் செய்திருக்கிறேன். இருந்தாலும் அவற்றின் இழைமம் வேறுபாடானது என்பதுடன் உருவைக் கையாளும் விதமும் எம்மில்தான் தங்கியிருக்கிறது.

**நீங்கள் கருத்துருவக் கலை, சமகாலக் கலைப் படைப்புகளின் கண்காட்சிகளை ரஷ்யாவில் பார்த்திருக்கிறீர்களா? எவ்வாறான கலைக்காட்சிகள் அவை?**

எல்லா மேதைகளது படைப்புகளையும் அங்கு பார்க்க முடிந்தது. மலிவிச், கன்டின்ஸ்கியின் படைப்புகளைப் பார்த்திருக்கிறேன். ரெம்பிரான், கோயா, ஜேர்மனிய ஓவியர்களின் வெளிப்பாட்டுவாதப் படைப்புகள், பிரான்சிஸ் பேகனின் படைப்புகள் இன்றும் எனக்குள் காட்சி நினைவுகளாக நிற்கின்றன.


எனது ஆசிரியர் சலகோவ் மிகவும் ஜனநாயகமானவர். அக்கடமிக் யதார்த்தவாதத்துக்குள் எம்மை அமிழ்த்துபவராக அவர் இருக்கவில்லை. அவர் கம்யூனிசக் கட்சியின் அங்கத்தவராக இருந்தார். சொந்தப் பார்வையைக் கொண்ட ஓர் ஆளுமை. அதனால் நாங்கள் எங்களது சொந்தப் பாணியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பார். மாணவர்களைச் சுட்டி "உங்களது முகங்களைப் பாருங்கள், அவை வேறுபட்டவை என்பதால் உங்கள் கலையும் வேறுபட்டிருக்கும், நீங்கள் யார் என்பதை நீங்கள் தான் கண்டுபிடிக்க வேண்டும்" எனக் கூறுவார். எங்களது ஸ்ரூடியோ பல சர்வதேச மாணவர்களைக் கொண்ட சுவாரசியமான ஸ்ரூடியோ. ஆனால் அயல் ஸ்ரூடியோக்களோ மிகவும் ரஷ்யத்தனமானவை, சுதந்திரமற்றவை, அவர்களது ஆசிரியர்களில் தங்கியிருக்க வேண்டியிருந்தது. ரஷ்ய வரலாற்றில் இறுதி மனப்பதிவுவாதியான மச்சால்ஸ்கி எமது கல்வி நிறுவனத்திற்கு வந்து அவரது ஆயுளின் இறுதி வரை அங்கு கற்பித்தார். அவர் எனக்கு ஸ்ரான்லி அபயசிங்கவை நினைவுபடுத்துபவராகத் தோன்றினார். சலகோவின் ஸ்ரூடியோ படைப்புகளைப் படைப்பதில் முழுதும் சுதந்திரமானது. மச்சால்ஸ்கியின் ஸ்ரூடியோ அவரது பாணியில் கலைப்படைப்புகளை உருவாக்குவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது.

இக்காலத்தில் நவவேட்கைவாதம், பரிசோதனைக் கலை என்பன வந்தடைந்தன. அது பரிசோதனைக் கலை, புதிய கலை நிகழ்ந்த காலகட்டம். குறிப்பாக 1985 இலிருந்து மிகெயில் கோர்பசேவ் ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து அரசியல் மாற்றம் நிகழத் தொடங்கியிருந்தது.

**இலங்கையில் இராணுவ மயமாக்கப்பட்ட சமூகத்தினை எவ்வாறு உங்களது படைப்புகள் வெளிப்படுத்துகின்றன?**

1998 இல் கொழும்பு, கெரிடேஜ் கலரியில் வைக்கப்பட்ட "பரலிசமும் அண்மைக்காலப் படைப்புகளும்" எனத் தலைப்பிடப்பட்ட கலைக் காட்சியில் "பீப்பாய்களின் சகாப்தத்தில் பெண்கள்"

எனும் ஓவியத்தினை உள்ளடக்கியிருந்தேன் *(படம் 2)*. 1990கள் காலப் பகுதியில் இலங்கை நகரத் தரைத்தோற்றத்தில் இராணுவ உரு மறைப்பு (camouflage) தீட்டப்பட்ட பீப்பாய்களும் சுவர்களும் பரவலாக இருந்தன. வாயில்கள் தடுப்புகள், வீதித் தடைகள், இராணுவத் தாபனச் சுவர்கள், பேரூந்துத் தரிப்பிடங்கள் போன்றன இராணுவ உருமறைப்பு நிறந்தீட்டப்பட்ட மேற்பரப்புகளைக் கொண்டிருந்தன. தெருக்களை அமைக்கவெனக் கொண்டுவரப்பட்ட தார்ப் பீப்பாய்கள் பாதுகாப்பு என்ற பெயரில் தெருக்களைத் தடுக்கப் பயன்படுத்தப்பட்டன. கொழும்பின் பல பகுதிகளில் இவ்வகையான இராணுவ மறைப்பு நிறம் பூசப்பட்ட தார்ப் பீப்பாய்கள் காணப்பட்டன. இவை மக்களைப் பிரிப்பதாக உணர்ந்தேன். எனவே இந்தப் பீப்பாய்களை மையமாகக் கொண்டு காண்பியப் படைப்புகளை உருவாக்கினேன். இவற்றைக் கொண்டு போர் மற்றும் வன்முறை எனும் என்னுடைய கதையைக் கூறமுடிந்தது. "பீப்பாய் வாதம்/பரலிசம்" என்பது போருக்கெதிரான எனது அரசியலாகவும் செயற்பட்டது.





*படம் 2 (இடது): பீப்பாய்களின் சகாப்தத்தில் பெண்கள், 1998, வர்ணம் தீட்டப்பட்ட மூன்று பீப்பாய்கள், மரப்பலகையில் அக்றலிக் வர்ணம். புகைப்படம்: கலைஞரின் சேகரிப்பு.*
*படம் 3 (வலது): வெற்றியின் நடனம், 1998, கன்வஸில் எண்ணெய் வர்ணம். புகைப்படம்: கலைஞரின் சேகரிப்பு.*

இக்காலத்தில் காணாமல் போனவர்கள், கடத்தப்பட்டவர்கள் மற்றும் கொலைகள் போன்ற விடயங்களைத் தான் கேள்விப்பட்டிருந்தோம். 1998 இல் யாழ்ப்பாணம் வடமராட்சியில் பெரிய போர் நிகழ்ந்தது. போரில் இராணுவத்தினர் பலர் இறந்தனர். ஆனால் அரசாங்கம் அக்கதையையோ, எத்தனை பேர் இறந்தார்கள் என்ற தகவலையோ வெளிப்படுத்தவில்லை. பதிலாக அவர்கள் வெற்றிக் கதைகளைக் கூறிக் கொண்டிருந்தார்கள். எங்கள் வீரர்கள் (சிங்கள வீரர்கள்) அங்கு அப்போது இந்தப் போரில் வெற்றி பெற்றிருந்தால் இவ்வாறு தான் இருப்பார்கள் என்பதை வரைந்திருந்தேன். 1998 இல் கொழும்பு, கெரிடேஜ் கலரியில் வைக்கப்பட்ட "பரலிசமும் அண்மைக்காலப் படைப்புகளும்" எனத் தலைப்பிடப்பட்ட கலைக்காட்சியில் *"வெற்றியின் நடனம்"* (1998) என்கின்ற ஓவியத்தினைக் காட்சிப்படுத்தினேன். வெற்றிக் கொண்டாட்டத்தில் அங்கவீனர்களாக இருக்கின்ற வீரர்கள் ஆடிக்கொண்டிருப்பதாக வரைந்திருக்கிறேன் *(படம் 3)*. இதில் இரண்டு விதமான தலைக்கவசத்தினை வரைந்திருக்கிறேன். ஒரு பக்கத்தில் இலங்கை இராணுவத் தலைக்கவசமும் இன்னொரு பக்கத்தில் புலிகள் பயன்படுத்திய தலைக்கவசமும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. பாரம்பரிய கண்டி ஓவியங்களின் பாணியை நினைவுபடுத்தும்படி வெள்ளைக் கோட்டிற்குள்

சிவப்பு நிறப் பின்னணியில் வரைந்துள்ளேன். அவ்வீரரது இதயம் வெறுமையாகவும் ஆண்குறி சோர்ந்துபோயுள்ளதாகவும் வரைவதனூடே இந்த வெற்றியை நான் கேள்விக்குட்படுத்தினேன்.

2004 ஆம் ஆண்டு போர் நிறுத்த உடன்படிக்கை வந்தவுடன் உருமறைப்பு ஓவியங்களை உருவாக்க நினைத்தேன். அவுஸ்திரேலியா கலரியால் இப்படைப்புகள் வாங்கப்பட்டன. இதற்குப் பின்னர் நவ-பீப்பாய்வாதம் எனும் வகையிலான படைப்புகளை 2004 இல் வீ.ஏ.வீ.ஏ கலரி, எதுல்கோட்டேயில் "உருமறைப்பும் ஏனைய படைப்புகளும்" எனத் தலைப்பிடப்பட்ட கலைக்காட்சியில் காட்சி செய்தேன். 2007 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு நகரத்திலிருக்கும் பீப்பாய்கள் அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக மஞ்சள் குழாய்களாலான தடுப்புகள் உருவாக்கப்பட்டன. அவ்வாறான தடுப்புக் குழாய்களைக் காட்சிக்கூடத்தில் தாபித்திருந்தேன். இலங்கையின் தேசிய மலரான நீலோற்பலம் நிறைந்த ஓவியம் ஒன்றை காட்சிக் கூட இடதுபுறச் சுவரிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மலரான கார்த்திகைப் பூக்களடங்கிய ஓர் ஓவியத்தை வலதுபுறச்சுவரிலும் ஏனைய சுவர்களில் உருமறைப்பு உருக்களடங்கிய ஓவியங்களையும் காண்பித்தேன். அழிவான சூழல் ஒன்று எவ்வாறு உருவாக்கப்படுகின்றது எனும் பாடுபொருளில் அவற்றை அணுகியிருந்தேன். அத்துடன் இக்காட்சியறையில் கையுறைகளைத் தொங்கவிட்டிருந்தேன். அவை வெள்ளை நிற மேற்சட்டை அணிந்த பிரபுக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பாதையிலிருக்கும் மக்களை அகற்றும் பாதுகாவலர்களின் கைகளைக் குறிக்கிறது. அவற்றின் பெரு விரல்களைக் கீழ் நோக்கிக் காட்டுவதனூடாக சாவிற்குச் செல்லுதல் எனும் பொருளில் குறியீடு செய்தேன்.


**2009 ஆம் ஆண்டு இறுதி யுத்த காலத்தின் பின்னரான படைப்புகள் பற்றிக் குறிப்பிடுங்கள்.**

எனது படைப்புகள் இராணுவமயமாதலை நீக்குதல் பற்றிப் பேசுகின்றன. "வெள்ளை வாகனம் அல்ல, வெள்ளைக்கொடி அல்ல" என்ற படைப்பு குறிப்பாகப் பத்திரிகையாசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டதன் பின்னருள்ள காலகட்டம் சார்ந்தது. 2009 இல் படைக்கப்பட்டது. பின் – பரலிச காலப் படைப்புகளில் வெள்ளைக் கொடியை பிரச்சனைக்குரிய குறியீடாகப் பயன்படுத்தினேன். வெள்ளைக் கொடி சமாதானத்தை வழங்கவில்லை என்பதை முன்வைக்க விரும்பினேன். போர் முடிவுக்குவந்த பிறகு கண்காட்சிகளில் வைக்கப்பட்ட படைப்புகளில் வெள்ளைக் கொடியினைக் கருத்துருவ ரீதியிலும் குறியியல் ரீதியிலும் பயன்படுத்தியிருந்தேன். "இது ஒரு வெள்ளைக் கொடியல்ல" என எழுதிய சொற்களை அப்படைப்புக் கொண்டிருந்தது. பார்வையாளர்களைத் தூண்டுவதற்காக இதை உருவாக்கியிருந்தேன். வெள்ளை வாகனம் மூலம் குறித்த அரசாங்க ஆட்சியில் அவர்களுக்கு ஒவ்வாதவர்கள் கடத்தப்படுவதைச் சுட்டிக்காட்டுவதற்கு "வெள்ளை வாகனம் அல்ல" எனும் வசனத்தை எழுதினேன். இப்படைப்பு 2010 ஆம் ஆண்டு காட்சியில் வைக்கப்பட்டது. ராஜபக்ச அரசாங்க ஆட்சியின் கொடுமைகளையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தும் படைப்பாக அது இருந்தது. அக்காலப் பகுதியில் இப்படைப்புகள் சமூகத்தால் ஏற்கப்படவில்லை. 2022 ஆம் ஆண்டு அரகலய நிகழ்ந்த போது தான் நான் ஏற்கனவே பிரச்சனைக்குள்ளாக்கிய இவ்விடயங்கள் சமூகத்திற்குள் உள்வாங்கப்பட்டன.

2009 ஆம் ஆண்டு போர் வலயங்களிலிருந்த மக்கள் முகாம்களில் அடைக்கப்பட்டார்கள். முட்கம்பி வேலிகள் முன்னர் காணிகளையும் சொத்துக்களையும் பாதுகாக்கவே பயன்படுத்தப்பட்டன. ஆனால் போரினால் பாதிக்கப்பட்ட மக்களைக் குடியிருத்திய முகாம்களுக்கு முட்கம்பிகளாலான எல்லை வேலிகள் அமைக்கப்பட்டிருந்தன. மக்களை எல்லைப்படுத்தி அடைத்து வைப்பதாக அது

இருந்தது. அரச முகாம்களில் பாதுகாப்பு என்பதற்குப் பதிலாக அவை தண்டனையாக இருந்தன. இலங்கையில் முதன் முதலாக இனங்களைப் பிரிக்க முட்கம்பிகள் நிறுத்தப்பட்டன. இம்முகாம்கள் நாசி முகாம்களை ஞாபகப்படுத்துவது போலுள்ளது. முட்கம்பியைப் பிரதான விடயமாகக் கொண்டு இது மாதிரியான சதுரக் கூடுகளை உருவாக்கினேன். லயனல் வென்ற் ஆர்ட் கலரியில் 2010 ஆம் ஆண்டு "விழிப்பும் ஏனைய படைப்புகளும்" எனும் காட்சியில் இந்நிலவரத்திலிருந்து உருவான குறியீடுகளைப் பயன்படுத்தி தாபனக்கலை ஒன்றினை உருவாக்கினேன் *(படம் 4)*.





*படம் 4 (இடது): விழிப்பும் ஏனைய படைப்புகளும், 2010, லயனல் வென்ற் கலைக்கூடம். புகைப்படம்: கலைஞரின் சேகரிப்பு*

*படம் 5 (வலது): குண்டர்கள், கறுப்பு ஓவியங்களும் ஏனைய ஓவியங்களும், 2010, லயனல் வென்ற் கலைக்கூடம். புகைப்படம்: கலைஞரின் சேகரிப்பு.*

இறுதி யுத்தத்தால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கவைக்கப்பட்ட பின்னர் வெளியே வந்தவர்களுக்கு மறுவாழ்வளிக்க 2010 இல் இந்திய மத்திய அரசு கூரைத் தகரங்களைக் கொடுத்தது. அவை கணவனை இழந்த பெண்களுக்கும் கொடுக்கப்பட்டது. ஒரு வகையில் இவைதான் அவர்களுடைய நலச் சேவையாக இருந்தது. பீப்பாய்களால் உருவாக்கப்பட்ட தூண்கள், முட்கம்பியால் உருவாக்கப்பட்ட தூண்கள், நலச் சேவைக்காகக் கொடுக்கப்பட்ட தகரங்களைக் கொண்ட தூண்கள் மற்றும் ஜே.வி.பி– அரசு பயங்கர காலகட்டத்தில் ரயரினைப் போட்டு ஆட்களை எரித்தமையை நினைவுபடுத்த ரயரினால் உருவாக்கப்பட்ட தூண்கள் என அவைதான் இக்காலத்தைத் தாங்கி நின்றது. அவற்றின் நடுவில் நிற்கும் நிலையிலான பெண்ணுருக்களை அவை காணாமற் போனோரின் உருவைத் தாங்கியிருப்பதாக வடிவமைத்திருந்தேன்.

2010 இல் லயனல் வென்ற் கலைக் கூடத்தில் ஒழுங்கமைத்திருந்த "கறுப்பு ஓவியங்களும் ஏனைய ஓவியங்களும்" எனும் காட்சியில் கண்ணீர்ப் புகை அடிக்கும் இராணுவத்தின் முகக்கவசக் கண்ணாடிகளில் பௌத்த துறவிகள் மற்றும் மாணவர்கள் எதிரொளிப்பதை ஓர் ஓவியத்தில் வரைந்திருக்கிறேன் *(படம் 5)*. யாரைத் தாக்குகின்றார்கள் என்பதை அவை காட்டுகின்றன. மற்றொரு ஓவியமான "முகமூடிகள் அணிதல்" எனும் ஓவியத்தில் இத்தாலிய பரோக்கோ காலகட்ட ஓவியரான கராவாச்சியோவின் படைப்பில் வரும் முகமூடிகள் போன்றவற்றின் தாக்கத்தில் அம்முகமூடி எண்ணக்கருவை உள்வாங்கியிருந்தேன். அசிங்கமானவர்கள் வெள்ளை

நிற அழகான முகமூடிகளை அணிந்திருக்கிறார்கள், மஹிந்த ராஜபக்ச ஒரு மூலையிலிருந்து அனைத்தையும் பார்த்துக் கொண்டிருப்பதாக அப்படைப்பு அமைந்திருக்கிறது. தேர்தல் விமர்சனமாக அவ்வோவியத்தினை வரைந்திருந்தேன்.

2016 இல் சஸ்கியா பெர்னாண்டோ கலைக் கூடத்தில் வைக்கப்பட்ட "*அலைவு, 2016" (Glitch)* எனும் கலைக் காட்சியில் ஓவிய உருக்களை தொலைக்காட்சியில் ஏற்படும் காட்சி அலைவினை ஒத்த தன்மையில் வரைந்திருக்கிறேன். தொலைக்காட்சியில் குடித்தல், புகைப்பிடித்தல் மற்றும் நிர்வாணம் போன்ற விடயங்களைக் காட்டும் போது நிறச்சதுரங்கள் எந்தெந்த இடங்களை மறைக்குமோ அது போல இப்படைப்பில் கொண்டு வந்துள்ளேன். இவ்வாறான விடயங்களைப் பார்க்கும்போது இவற்றில் ஏதோ மறைக்கப்படுகின்றது என்பதனை வெளிச்சத்திற்கு கொண்டுவர முனைகிறேன். தொலைக்காட்சி பார்க்கும்போது ஒரு காட்சியில் குழப்பம் ஏற்படுகிறபோது கலங்கல் தன்மை அல்லது தெளிவற்ற தன்மை ஏற்படுகிறது. போருக்குப் பிற்பட்ட காலப்பகுதியின் சம்பவங்கள் இவ்வாறான காட்சிக் கலக்கத்துடனேயே காணப்பட்டது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.



**படம் 6: *அழகுபடுத்தல்,* 2013, லயனல் வென்ற் கலைக்கூடம், கொழும்பு. புகைப்படம்: கலைஞரின் சேகரிப்பு.**

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் கோத்தபாய ராஜபக்ச கொழும்பு நகரை அழகிய நடைபாதைகளாலும் பூந்தோட்டங்களாலும் அழகுபடுத்தும் திட்டம் ஒன்றை ஆரம்பித்தார். அழகுபடுத்தும் திட்டத்திற்கு எதிராக "*அழகுபடுத்தல்*" எனும் தலைப்பிலான காட்சியினை 2013இல் லயனல் வென்ற் கலைக் கூடத்தில் ஒழுங்கமைத்திருந்தேன் *(படம் 6).* கலைக்கூடத் தரைக்கு செங்கற்களிட்டிருந்தேன். நடைபாதைகளிற்கு "கோட்டா பிறிக்ஸ்" என அழைக்கப்படும் செங்கற்கள் பதித்து நாடு அழகுபடுத்தப்பட்டதன் மூலம் எது மறைக்கப்பட்டது என்பதைக் கேள்விக்குட்படுத்துவதும் கோத்தபாய கொழும்பு நகரை அலங்கரிக்கத் திட்டமிட்டமைக்குப் பின்னாலுள்ள அரசியலை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதும் இக்காட்சியின் நோக்கமாக இருந்தது. செம்மணி, மாத்தறை போன்ற இடங்களில் காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் மறைக்கப்பட்டன. நாட்டிலிருக்கின்ற ஏனைய விடயங்கள் மறைக்கப்பட்டு அழகான இடமாக்கப்பட்டது. இக்காட்சியினைப் பார்க்க

வந்தவர்கள் படைப்பு எங்கே இருக்கிறது எனக் கேட்டார்கள். ஏனெனில் கலைக்கூடச் சுவரில்தான் படம் இருக்கும் என நினைத்துத்தான் அவர்கள் வந்தார்கள். நான் காட்சியினை நிலத்திற்கு கொண்டு வந்திருந்தேன்.

இதே காலத்தில் நிதி மற்றும் உத்தியோகபூர்வ முறைகேடு எனும் பெயரில் குற்றம் சாட்டப்பட்டுத் தலைமை நீதிபதி சிரானி பண்டாரநாயக்கா 2013 இல் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அதனைச் சித்தரிக்க நீதித் தேவதையினைக் குறிக்கும் சிற்பம் ஒன்றைத் துண்டு துண்டாக உடைத்து எல்லா இடமும் சிதறக் காட்சிப்படுத்தினேன். அவற்றுடன் சில உருமறைப்பு ஓவியங்களையும் தரையில் காட்சிப்படுத்தியிருந்தேன்.

2014 இல் "ஏகாதிபத்தியம்" எனும் தலைப்பிலான காட்சியினை லயனல் வென்ற் கலைக்கூடத்தில் ஒழுங்கமைத்திருந்தேன். தலைக்கவசம் அணிந்திருக்கும் வெற்றிடமான தலையைக் கொண்ட போர்வீரர் உருவின் பிற்புறம் குண்டர்களும் கும்பலும் ஒழிந்திருக்கும் வகையில் சிற்பம் ஒன்றினைக் காட்சி செய்திருந்தேன். அவ்விராணுவ வீரனின் பிற்புறம் கைகள் பலவற்றைப் பொருத்தியதனூடாக பிற்புறமிருக்கும் குண்டர்களையும் குறியீடு செய்தேன். 2010 இல் "குண்டர்கள்" (mob) எனும் தலைப்புடைய படைப்பு ஒன்றை உருவாக்கியிருந்தேன். போரிற்குப்பின் நிகழ்ந்த முதலாவது போராட்டம் ஒன்றில் இந்தக் குண்டர்கள் என்ன செய்கிறார்கள் எனப் பார்த்திருக்கிறேன். அப்படைப்பை மீள்பார்வை செய்வதாக இந்த மெட்டபிசிக்ஸ் எனும் படைப்பினை உருவாக்கினேன் *(படம் 7)*.




***படம் 7: மெட்டபிசிக்ஸ், 2014, லயனல் வென்ற் கலைக்கூடம், கொழும்பு. புகைப்படம்: கலைஞரின் சேகரிப்பு***

இப்படைப்பு அளுத்கமவில் முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்ந்த வன்முறையை விமர்சிக்கிறது. இக்காலத்தில் நான் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தேன். அரசாங்கம் மூன்று நபர்களைக் கொலை செய்ய அச்சுறுத்தல் விடுத்ததாகவும் என்னை அங்கு தாக்குவதற்கு நபர்கள் வருவதாகவும் நண்பர்கள் அறிவித்திருந்தனர். அதனால் என்னுடைய ஒரு நண்பர் தன் குடையால் என்னை மறைத்துக் கூட்டிச் சென்றார். குடையின் இடைவெளியால் பார்த்த போது அங்கு வன்முறையாளர்களின் கைகள்

தெரிந்தன. ராஜபக்ச குடும்பம் மூன்றாவது முறையாகத் தேர்தலில் பங்குபெற எண்ணியிருந்த வேளை அவர்கள் அத்தேர்தலில் வெற்றிபெற இன்னும் ஒரு போர் தேவைப்பட்டது. அதற்காக முஸ்லிம்களைப் பயன்படுத்தினர்.

இறுதி யுத்தத்தில் அரச படைகளால் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கான விசாரணையில் மேலைத்தேச நாடுகள் மின்சாரக் கதிரையில் தன்னை அமர்த்துவர் எனவும் தான் நிலத்தைப் பாதுகாப்பதையே செய்ததாகவும் அது மனித உரிமை மீறல் இல்லை என்றும் சிங்கள மக்களிடம் மகிந்த ராஜபக்ச கூறிவந்தார். அவர் தன்னைக் காத்துக்கொள்வதற்காகக் கூறும் மின்சாரக் கதிரை தொடர்பான கதையைக் கருத்துருவாகக் கொண்டு ராஜபக்சவின் அரசாங்கம் தேர்தலில் தோற்றதன் பின்னர் அக்கால அரசாங்கத்தின் சூழலை வெளிப்படுத்தும் வகையில் ராஜபக்சவின் நிலைகுலைவை மின்சாரக் கதிரையின் நிலைகுலைவாகக் காண்பித்திருக்கிறேன்.

"மின்சாரக் கதிரை" எனும் ஏற்கனவே செய்த படைப்பை மீள்பார்வை செய்து "மின்சாரக் கதிரை விற்பனைக்காக" (2016) எனும் படைப்பை உருவாக்கினேன். இதனை லயனல் வென்ற் கலைக் கூடத்தில் 2016 இல் காட்சிப்படுத்தினேன். மின்சாரக் கதிரை பற்றிய அந்தக் கதையை அவர்கள் விற்பனை செய்ய முடிவெடுத்துள்ளனர் எனும் அர்த்தத்தில் இப்படைப்பு மீளுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. தெற்குப் பகுதிகளில் வன்முறைக் கும்பல்களின் செயற்பாடு அதிகரித்தது. "அசுரன் மீண்டும் வருகின்றான்" என்ற கருத்தைச் சித்தரிக்க "நிர்வாக அரக்கன்" (2018) என்ற படைப்பை உருவாக்கினேன் *(படம் 8)*. இதனை 2018 இல் சஸ்கியா பர்னாண்டோ கலைக் கூடத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட "நிர்வாக அரக்கன்" எனத் தலைப்பிடப்பட்ட கலைக் காட்சியில் காட்சிப்படுத்தியிருந்தேன். நாட்டின் அரசியல் ரீதியான மாற்றம் நிகழப்போகின்றது. எனவே அசுரனை நிமிர்ந்து இருப்பதாகக் காட்டாது வீழ்ந்து இருப்பதாகக் காட்டியுள்ளேன். வீழ்ந்துள்ள அசுரன் மீள வருகிறான் என்பது இதன் கருத்து ஆகும்.



***படம் 8: நிர்வாக அரக்கன், 2018, சஸ்கியா பர்னாண்டோ கலைக்கூடம், கொழும்பு. புகைப்படம்: கலைஞரின் சேகரிப்பு.***

2022 இல் சஸ்கியா பர்னாண்டோ கலைக்கூடத்தில் வைக்கப்பட்ட "எக்கே கோமோ" எனும் தலைப்பிடப்பட்ட கலைக்காட்சியில் "எக்கே கோமோ" (2022) என்ற ஓவியம் வைக்கப்பட்டது *(படம் 9)*. இது குறியீட்டு ரீதியான வெளிப்பாட்டைக் கொண்டது. பிலாத்து யேசு நாதரையா அல்லது

பராபஸையா விடுவிப்பது என மக்களிடம் கேட்கும் போது மக்கள் பராபஸ் என்றனர். ஜனநாயகம் பற்றிப் பல இடங்களில் பேசப்படுகின்றது. ஆனால் உண்மையில் பலருக்கு ஜனநாயகம் என்றால் என்ன என்பது தெரியவில்லை. அது திரிபுபடுத்தப்பட்டிருக்கிறது. இங்கு ஜனநாயகம் என்பது மக்களைக் கையாளுதல் என்று மாறியிருக்கின்றது. தேர்தல் நிகழும் காலங்களில் மக்களுக்கு திரிபுபடுத்தப்பட்ட கதைகள் போய்ச் சேருகின்றன. மக்கள் மதம் போன்ற பல விடயங்களால் தாக்கம் பெற்றுத் தவறாகக் கையாளப்படுகின்றனர். குண்டர்களின் தாக்குதல்கள், லஞ்ச ஊழல் போன்றனவெல்லாம் நிகழ்கின்றன.



*படம் 9: எக்கே கோமோ, 2022, சஸ்கியா பர்னாண்டோ கலைக்கூடம், கொழும்பு. புகைப்படம்: கலைஞரின் சேகரிப்பு.*

**கலை உலகில் கலைச் சந்தையின் வகிபாகம் தவிர்க்க முடியாததாகியுள்ளது. கலைக் கூடங்களினூடான தொடர்பு பற்றியும் உங்களது படைப்புகளை விற்பனை செய்த அனுபவங்களைப் பற்றியும் பகிர முடியுமா?**

கலைக் கூடங்களில் கலைப் படைப்புகளை விற்பனை செய்வதை நான் ஊக்குவிக்கிறேன். படைப்புகளைப் படைப்பது தான் படைப்பாளியின் வேலை, விற்பதல்ல. 17 ஆம் நூற்றாண்டில் ரெம்பிரான்ட் படைப்புகளை விற்பனை செய்தார், கற்பித்தார், இன்னும் பலவற்றை அவரே செய்தார். இன்று இவையெல்லாம் செய்ய எமக்கு நேரமில்லை. படைப்புகளை விற்பனை செய்யப் பல பிரதிநிதிகளுண்டு. அது அவர்களது வேலை. அடுத்து, சந்தைக்காக கலைப் படைப்புகளை உற்பத்தி செய்யும் படைப்பாளிகளும் உண்டு. நான் அவ்வாறல்ல. எனக்கு கலை தொடர் பயிற்சியாக வருவது. கலையை விற்பதற்கு என்று மட்டுமே நான் படைப்பை உருவாக்குவதில்லை.

நான் 2016ஆம் ஆண்டிற்குப் பிறகு செய்த எல்லாப் படைப்புகள் பற்றிய தகவல்களையும் சஸ்கியா பர்னாண்டோ காட்சிக் கூடத்தின் வலைத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். 2016 இன் பின்னர் சஸ்கியா பர்னாண்டோ காட்சிக் கூடத்தில் எனது கண்காட்சிகள் எல்லாம் நடைபெறுகின்றன. இதற்கு முன்னர், லயனல் வென்ற் காட்சிக் கூடத்தில் செய்யப்பட்ட கண்காட்சிகளுக்கான ஏற்பாட்டுச் செலவை நானே கொடுக்க வேண்டியிருந்தது. சஸ்கியா பர்னாண்டோ காட்சிக் கூடத்திலும் கெரிடேஜ் காட்சிக் கூடத்திலும் பணம் செலுத்தத் தேவையில்லை.

**காட்சிக் கூடங்களில் கலைப் படைப்புகள் வைக்கப்படுவதால் அவை சந்தைப் பெறுமானத்தைப் பெறுகிறது எனும் அடிப்படையில் சமகாலக் கலைகளின் நெறிமுறையானது காட்சிக் கூடங்கள் மற்றும் கலைச் சந்தை விற்பனை எதிர்ப்பு என்பவற்றைப் பகுதியளவில் கொண்டிருக்கிறது. அவை பற்றிய உங்கள் கருத்து?**

கலைக் கூடங்கள் கலை விற்பனைக்காக எப்போதும் புதிய குரல்களைத் தேட வேண்டும். அவர்கள் கருத்துருக்களைத் தான் விற்பனை செய்ய வேண்டுமே தவிர கலைகளையல்ல. இவ்வாறு தான் அவர்கள் கலைச் சந்தையை உருவாக்குகின்றனர். புதிய விடயங்களுக்காகக் காத்திருந்து அவற்றைச் சேகரிக்கின்றனர். இவ்வாறே கலைக் கூடங்கள், அரும்பொருளகங்கள், தனியார் சேகரங்கள் கலைச் சேகரிப்புகளைச் செய்கின்றனர். எடுத்தாளுனர்கள் படைப்பாளிகளைச் சேர்த்து வேலை செய்யவேண்டியவர்கள், அவர்களில் சிலர் படைப்பாளிகளைத் தவறாகத் தூண்டுபவர்களாகவும் உள்ளனர். சில படைப்பாளிகள் தவறாகத் தூண்டப்பட முடியாதவர்களாகக் காணப்படுவர். என்னைப் பொறுத்தவரையில் நான் இத்தகைய எந்தக் கட்டளைக்கும் இணங்கி வேலை செய்வதில்லை.

**உங்கள் கலைப் படைப்புகள் பெரும்பாலும் காட்சிக் கூடமூடாகவே காட்சிப்படுத்தப்படுகின்றன. இதனால் காட்சிக் கூடத்தின் விருப்பிற்கமைவாகக் கலைப் படைப்புகளைப் படைக்கின்றீர்களா?**

காட்சிக் கூடங்கள் அவ்வாறு என்னைக் கேட்க முடியாது. நான் அவ்வாறு கேட்கும் நிலவரத்தில் இல்லை. அவர்கள் இளம் படைப்பாளிகள், தொழிலாண்மை சாராத படைப்பாளிகளை அவ்வாறு கையாள முடியும். ஆனால் என்னிடம் அவர்கள் அவ்வாறு கேட்க நான் அனுமதிப்பது இல்லை. நான் எதை விற்கலாம், எப்படி விற்கலாம் எனக்கூறும் நிலவரத்தில் இருக்கிறேனே தவிர காட்சிக் கூடம் எனக்குச் சொல்லும் நிலவரத்தில் நான் இல்லை. காட்சிக் கூடம் ஒரு சந்தர்ப்பத்தில் பின்வருமாறு குறிப்பிட்டது, "நீங்கள் அதிகளவான படைப்புகளை உற்பத்தி செய்கின்றீர்கள், அதனால் சந்தைக்குள் அதிக கலைப் படைப்புகள் வருகின்றன. அவற்றை வாங்க ஆட்கள் இல்லை. இதனால் படைப்புகளின் விலை குறையும் என்பதால் கொஞ்சம் குறைவாக உற்பத்தி செய்ய வேண்டும்" என்று. அது எனது பிரச்சனை இல்லை. அது அவர்களுடைய பிரச்சனை ஆகும். நீங்கள் உங்களை ஒரு படைப்பாளியாக நிறுவுதல் என்பது தான் முக்கியமானது. நீங்கள் காட்சிக் கூடம் என்ன செய்யவேண்டும் என்பதைக் கூறலாம். நீங்கள் அதைச் சொல்லாது விட்டால் அவர்கள் எப்போதும் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதனைக் கூறுவார்கள்.

நீங்கள் உங்கள் கலைப் படைப்பைப் பற்றி யாரிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். உதாரணமாக ஜே.டி.ஏ பெரேரா கலைக் கூடத் தொழிலாளியிடம் தனது படைப்பு எவ்வாறு உள்ளது எனக் கேட்பார். அதனை அவர் ஒரு கலைஞரிடம் கேட்காது சாதாரண மக்கள் கலைப் படைப்பைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளும் ஆர்வத்தில் அவ்வாறு கேட்டிருக்கிறார். வெவ்வேறு எதிர்பார்ப்புகளைக் காட்சிக் கூடங்கள் கொண்டிருக்கும். கட்டாயம் எல்லா எதிர்பார்ப்புகளையும் நாங்கள் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதில்லை. நான் வெளிநாடுகளில் செய்யும் காட்சிப்படுத்தல்களுக்கு புதிதாக ஒன்றும் செய்வதில்லை. நான் இங்கு செய்து கொண்டிருப்பதைத்தான் தொடர்ந்தும் அங்கேயும் செய்திருக்கிறேன்.

**வெளிநாடுகளில் நீங்கள் காட்சிப்படுத்திய கண்காட்சிகள் பற்றிக் குறிப்பிடுங்கள்.**

முதன் முதலாக சர்வதேசக் காட்சி ஒன்றில் காட்சிப்படுத்திய எனது படைப்புப் பற்றிக் கூறுகிறேன். கொழும்பின் இராணுவ மயமாக்கலை எடுத்துக் காட்ட வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு வழங்கப்படும் கொழும்பு நகரின் வரைபடத்தைத் தளமாகக் கொண்டு அதன் விளிம்பில் பீப்பாய்களை அடுக்கி, வீதிகளில் தடுப்புகள் உள்ள இடங்களைக் குறித்து பாதுகாப்புச் சாவடிகளை நினைவுபடுத்தும் வகையில் அதை உருவாக்கிக் கொண்டேன். இந்தக் கண்காட்சியை ஒழுங்கு செய்தவர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப ஓவியம் இல்லாத ஒரு மாற்று வடிவத்தினைத் தெரிவு செய்தேன். (இது வியன்னாவில் தான் முதன் முதலில் காட்சிப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் டாக்காவில் காட்சிப்படுத்தப்பட்டது).

பீப்பாய்வாதக் காட்சிகளை இலங்கையிலும் பல சர்வதேச நாடுகளிலும் செய்துள்ளேன். இப்படைப்பினை இந்தியாவில் செய்தபோது அங்கு உலோகப் பீப்பாய்கள் விலை அதிகம் என்பதால் உலோகப் பீப்பாய்களை மீள் சுழற்சிக்கு அனுப்பி விடுவார்கள். அதனால் எனக்கு பீப்பாய் கிடைக்கவில்லை. இக்காட்சியை ஏற்பாடு செய்தவர்கள் பிளாஸ்ரிக் பீப்பாய்களைத் தந்தனர். அங்கு பிளாஸ்ரிக் பீப்பாய்களில் இதனை உருவாக்கினேன். குறிப்பாக பச்சை, மஞ்சள், கறுப்பு ஆகிய மூன்று நிறங்களையும் கொண்டு உரு மறைப்புச் செய்தேன். அதற்குப் பின்னர் தான் எதனாலும் உரு மறைப்பு செய்யலாம் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

1999 இல் ஜப்பானின் புக்கோகா நகரில் இரு வருடங்களுக்கு ஒரு முறை நிகழும் காட்சிக்காக எனது படைப்பை அனுப்புவதற்கு இலங்கை அரசாங்கம் ஈடுபாடு காட்டியது. அரசாங்க அதிகாரிகளுக்கு பீப்பாயில் வர்ணம் தீட்டி அனுப்புவது என்பது கலையா? என்ற பெரிய கேள்வி வந்தது. நான் இற்றுப்போன பீப்பாய்களுக்கு வர்ணம் தீட்டியிருந்தேன். எப்பொழுதுமே எல்லாவற்றையும் இறக்குமதி செய்யும் இலங்கை நாடு முதன் முதலில் ஒரு பீப்பாவை ஏற்றுமதி செய்தது இச் சந்தர்ப்பத்தில் தான்!

**இலங்கை அரசாங்கத்தின் முரணான இப்போக்கின் பின்னணி என்ன? தன்னை விமர்சிக்கும் கலையை அரசு ஏற்றுக்கொண்டு வெளிநாடுகளில் காட்சிப்படுத்த எவ்வாறு அனுப்பியது? இது பற்றி உங்களது கருத்து என்ன?**

இதை ஒரு முரண் நகையாகப் பார்க்கிறேன். குறித்த படைப்பினை அனுப்பி வைக்கும்படி ஜப்பானின் படைப்பாளிகள் என்னைக் கேட்கவில்லை. இலங்கை அரசாங்கத்திடம் ஜப்பான் அரசாங்கம் கேட்டுக் கொண்டது. ஜப்பான்– இலங்கை கலாசார அமைச்சு உறவுகளின் அடிப்படையில் படைப்பை அனுப்பி வைக்க வேண்டியிருந்தது.

**இப்பொழுது அந்தப் படைப்பு எங்குள்ளது?**

இப்படைப்பில் அடங்கிய தாயுரு ஓவியத்தை வாங்குவதற்கு ஒருவர் விரும்பினார். அவர் ஓவியத்தை மட்டும் வாங்கப் போவதாகக் கூறினார். நான் இந்தப் பீப்பாயையும் சேர்த்து வாங்க வேண்டும் என்று கூறினேன். பீப்பாய் வேண்டாம் ஓவியம் மட்டும் தான் வேண்டும் என்றார். அப்படி வாங்க முடியாது என்று சொன்னேன். தற்போது அப்படைப்பு புக்கோகா ஆசிய கலை அருங்காட்சியகத்தில் உள்ளது. இந்தப் படைப்புத் தொகுதியின் மூன்று பீப்பாய்களிலிருந்து ஓவியத்தை விலக்கிவிட்டால் இது சாதாரண ஓவியமாக மாறிவிடும்.

**அரசியல் காரணங்களுக்காக ஒடுக்குமுறை நிகழ்த்தப்படும் சமூகத்தில் நினைவுச் சின்னங்கள் குறிகாட்டிகளாக இருக்கும். நீங்கள் சில முக்கியமான நினைவு சார் கலையாக்கத்திற்குப் பங்களிப்பு செய்துள்ளீர்கள். அந்தவகையில் உங்களுடைய கலைப் படைப்புகளில் நினைவு கூரல் மற்றும் நினைவுச் சின்னங்கள் அமைத்தல் எனும் செயற்பாட்டின் வகிபாகத்தை விளக்கமுடியுமா?**


"போர் மற்றும் அதன் வழிகளால் பாதிக்கப்பட்ட அப்பாவிகளது நினைவுச் சின்னம்" எனும் படைப்பு 1999 இல் ஜப்பானிலுள்ள புக்கோக்காவில் நிகழ்த்தப்பட்ட காட்சியில் வைக்கப்பட்டது *(படம் 10)*. ஒரு பக்கம் முதலாம், இரண்டாம் உலகப் போர்களை ஞாபகமூட்டும் நினைவுச் சின்னம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. மறுபுறம் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட அப்பாவிகளுக்காக நான் உருவாக்கிய ஞாபகச் சின்னம் வைக்கப்பட்டது. இதன் முடிவில் பீப்பாய்களாலான தூண் மாதிரியான அமைப்பு காணப்படுகின்றது. உயரமான கூரான அமைப்பு ஒன்றை உருவாக்கி சரியான வழியை அடைவதற்குப் பல வழிகள் அமைத்து அப்பாதைகள் தடையேற்படும்படி உருவாக்கியிருந்தேன். இலங்கையில் எவ்வாறு பீப்பாய்களைப் பயன்படுத்தி அடைத்தார்களோ அவ்வாறு அடைத்திருந்தேன். அவற்றிற்கு மஞ்சள் நிறம் பயன்படுத்தியிருந்தேன். மஞ்சள் நிறத்தினை ஆத்மீகமாகக் கருதி இரு தரப்பினரிடமுமிருக்கும் பிரதான இரு மதங்களை வெளிப்படுத்தினேன்.




*படம் 10: போர், சிக்கலான காலங்களால் பாதிக்கப்பட்ட அப்பாவிகளின் நினைவுச்சின்னம், 1999 புக்கோக்கா ஆசியக் கலைக்காட்சி, ஜப்பான். புகைப்படம்: கலைஞரின் சேகரிப்பு.*

போரிலே இரு தரப்பாலும் கொல்லப்பட்ட நபர்களின் மெய்யுருக்களை அடிப்படையாகக் கொண்டு "சுவர்" எனத் தலைப்பிட்ட தாபனக்கலை ஒன்றை உருவாக்கினேன் *(படம் 11)* இதனை 2011 இல் லயனல் வென்ற் கலைக் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட "சுவர் மற்றும் ஏனைய படைப்புகள்" எனத் தலைப்பிடப்பட்ட கலைக் காட்சியில் நான்கு ஓவியங்களையும் சேர்த்துக் காட்சிப்படுத்தினேன். 30 அடி நீளம். 7 அடி உயரம் கொண்ட இந்தச் சுவர் நபர்களின் உருக்கள் பதியப்பட்டது போல் உட்குவிவாக இருக்கும். இந்த வெற்றிடமான உருக்கள் ஒருவகையில் உருவங்களின் பிரசன்னமின்மையைக் குறிப்பதுடன் அவர்களின் பிரசன்னத்தையும் காட்டுகிறது. இச்சுவரின் இருமருங்கிலும் தளவாடி பதிக்கப்பட்டதனூடாக இச்சுவர் முடிவற்று நீண்டது என்ற

மன விம்பம் உருவாக்கப்படுகிறது. எமது கலாசாரத்தில் பொதுவாக தீபம் ஏற்றுவது வழமையான விடயம் அதனுடன் தொடர்புறும் வகையிலும் இழப்பிலிருந்து மீளும் வகையிலும் ஒரு குணப்படுத்தல் முறையாக இந்த வெற்றிடமான உருக்களின் குழிவுகளுக்குள் விளக்குகளை பார்வையாளர்கள் ஏற்ற முடியும். நீங்கள் சிலவேளையில் நேரடியான சுட்டிப்பான நபர்களின் சாயல்களை இந்த மெய்யுருக்களில் இனங்காணலாம்: விஜயகுமாரதுங்க, பிரேமதாச, விடுதலைப்புலிகளின் போர்வீரர்கள், தாய்மார், போரில் இறந்த சாதாரண மக்கள் உட்பட சகல பிரதிநிதித்துவங்களையும் காட்டும் வகையில் அமைத்திருந்தேன். இவ்வாறு இத்தாபனக் கலை ஒரு ஞாபகச் சுவராக உருவாக்கப்பட்டது. அடுத்து வரும் வருடம் காட்சியைப் பார்க்க வந்தவர்கள் எங்கே அந்தச் சுவர் எனக் கேட்குமளவிற்கு அது ஓர் அலையினை உருவாக்கியிருந்தது.





*படம் 11: சுவர், 2011, சுவர் மற்றும் ஏனைய படைப்புகள், 2011, லயனல் வென்ற் கலைக்கூடம், கொழும்பு. புகைப்படம்: கலைஞரின் சேகரிப்பு.*

*படம் 12: நினைவுச்சின்னம், 2012, நினைவுச்சின்னங்களும் ஏனைய படைப்புகளும், லயனல் வென்ற் கலைக்கூடம், கொழும்பு. புகைப்படம்: கலைஞரின் சேகரிப்பு.*

தற்போது மதங்களுக்கு இடையிலான கற்கைக்கான இடமொன்றில் இது வைக்கப்பட்டிருக்கின்றது. அவ்வகையில் இது பாதுகாக்கப்பட்டிருக்கிறது. எனது பல படைப்புகள் பணம் கொடுத்து வாங்கப்படுவதில்லை. அதனால் சில கைவிடப்பட்டு சிதைவடைகின்றன. நான் சிதைவடைந்த பொருட்களை மீளப் புதிய வடிவில் உருவாக்குகின்றேன். இருப்பினும் பல தாபனக் கலைகள் அழிவடைந்து விட்டன.

லயனல் வென்ற் கலைக் கூடத்தில் "நினைவுச் சின்னங்களும் ஏனைய படைப்புகளும்" எனும் 2012 இல் ஒழுங்கமைக்கப்பட்ட காட்சியில் "நினைவுச் சின்னம்" எனும் படைப்பினைக் காட்சி செய்தேன் *(படம் 12)* நான்கு திசைகளை நோக்கி நான்கு இனத் தாய்மார்கள் வெறுமையான கையில் காணாமற் போனவர்களின் புகைப்படங்களை வைத்திருக்கும் மோல்ட் உருவங்களைக் கொண்டிருக்கின்றன. இதற்கான திறப்பு விழா நடைபெற்ற போது மக்கள் எண்ணெய் விளக்குகளுடன் வந்தார்கள். அதை ஏற்றி இந்த நினைவுச் சின்னத்தை திறந்து வைத்தனர்.

1987–1991 இடையில் தென்னிலங்கையில் ஜனத்தா விமுக்திப் பெருமுனாவின் ஆயுதக் கிளர்ச்சியின் போது வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்காக ஒரு நினைவுச் சின்னத்தை 'சீதுவ' என்ற இடத்தில் பெற்றோர்களும் கிராமத்தவர்களும் வழங்கிய பணத்தில் உருவாக்கினேன். இதில் காணாமற் போனதைக் குறிக்க மனிதவுருவைச் சுவரிலிருந்து வெட்டப்பட்ட வெற்றிடமாக உருவாக்கியுள்ளேன். அதன் இரு புறமும் காணாமற் போனவர்களின் புகைப்படங்கள் அச்சுப் பதிக்கப்பட்டுள்ளது. காணாமலாக்கப்பட்டோரின் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் பெயர்களைப் பொறிக்கும்படி கேட்டனர். அவ்வாறு பெயர்கள் பொறிப்பதாக இருந்தால் அவை தமிழ்–சிங்களம் என இரு மொழிகளிலும் எழுத வேண்டும் எனக் கூறினேன். படங்கள் தேசிய அடையாள அட்டை மற்றும் அஞ்சல் அடையாள அட்டையிலிருந்து எடுத்து வரப்பட்டவை. ஆனால் சிலருக்குப் படங்களிருக்கவில்லை. அந்தக் கிராமத்தில் மட்டுமே 1024 பேர் காணாமலாக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் கிடைத்த உருவப் படங்களைக் கொண்டு இங்கு காட்சிப்படுத்தியிருந்தேன். இச்சுவர் கண்ணீர்ச் சுவர் என்று அழைக்கப்பட்டது. அப்பகுதி பார்ப்பதற்கு படிகளுக்கு மேலேறி மிகிந்தலைக்குச் செல்வது போலிருக்கும்.

**சான்றிதழ் வழங்காது கலைக் கல்வியினைக் கற்பிக்கும் சுதந்திரமான மாற்றுக் கல்வி நிறுவனமாக நுண்கலைகளுக்கான விபவி அக்கடமியினை 1993 இல் நீங்கள் ஆரம்பித்திருக்கிறீர்கள். உங்களால் இயக்கப்படும் இந்த அக்கடமி ஆரம்பிப்பதற்கான பின்னணி என்ன? எவ்வாறு இதனை உருவாக்க முடிந்தது? பொருளாதார ரீதியில் அது எவ்வாறு சாத்தியமானது?**

நான் மாஸ்கோவிலிருந்து திரும்பியதும் பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தனியார் வகுப்புகள் நடாத்தக் கேட்டிருந்த போது நான் சம்மதிக்கவில்லை. ஆனால் எனக்கு ஒரு மாற்றுப் பாடத்திட்டத்தை ஏற்பாடு செய்ய யோசனை இருந்தமையே இதன் ஆரம்பமாகும். இதனை வயது வரையறை இல்லாமல் பெரியவர்களுக்கும் பல்கலைக்கழகத்தில் நுழைய முடியாதவர்களுக்கும் ஓவியம் வரைவதற்கான பயிற்சிக் கூடமாக அமைத்தேன். என்னுடைய கல்வி முறையானது சான்றிதழிற்கு முக்கியமளிக்காது பயிற்சிக்கு முக்கியமளிப்பதாக இருந்தது. இதனூடாகக் கலைப் பயிற்சி மற்றும் செயலாக்க வழி இல்லாதவர்களை ஊக்குவிக்க முடியும். திறமையை வளர்த்துக் கொள்ள பயிற்சியே பிரதானமாகையால் கலைக் கல்வியைத் தொடங்கினேன். நான் ஒருவருக்கு எப்படி வரைய வேண்டும் என்று கற்றுக்கொடுக்க முடியும். ஆனால் அதை எப்படி அவர்கள் தமது படைப்பாக்கத்தில் கொண்டுவர வேண்டும் என்று என்னால் கற்பிக்க முடியாது.

முதன் முதலில் 1993 இல் தொடங்கும் போது குறைவான நிதி உதவி கிடைக்கப்பெற்றது. 1996 இல் முழு நேரப் பாடமாக மாறியதுடன் 3–4 வருட கால கற்கையாக இருந்தது. என்னுடன் வேறு சில முக்கிய கலைஞர்களும் ஆசிரியர்களாக இந்த பரிசோதனைக் கல்வியூட்டலில் ஈடுபட்டார்கள். விபவியில் சில மாணவர்கள் உயர் நிலைக் கற்கையை கற்றனர். ஆனால் கல்வி என்பது சமூக மாற்றத்திற்கேற்ப தொடர்ந்து மாறுபடுவது. எனவே எதிர்காலத்தில் இன்னும் அதிக விடயங்களைச் செய்ய வேண்டிய பொறுப்பு எனக்குள்ளது. ஆரம்பத்திலிருந்தே கீவோஸ் (HiVOS) என்ற டச்சு நிறுவனம் ஆதரவு வழங்கியது. ஆனால் ஆரம்பத்தில் முதல் இரண்டு வருடங்கள் வெளியிலிருந்து எந்த ஆதரவும் இல்லாமல் எனது நேரத்தையும் இதற்குள் அர்ப்பணித்து தன்னார்வலர்களின் உதவியைக் கொண்டே இயக்கி வந்தேன். 2008க்குப் பின்னர் மாணவர்கள் கட்டணம் செலுத்தி

கல்வி கற்கும் நிறுவனமாக இது மாறியது. இதனாலேயே மாணவர் எண்ணிக்கை குறைவடைந்தது. கல்வி கற்கும் மாணவர்கள் சிலர் ஏழைகளாக உள்ளனர். கொழும்பில் மாத்திரமன்றி ஏனைய இடங்களிலும் கலைஞர்களை உருவாக்க வேண்டும் என்பதே இந்த அக்கடமியின் நோக்கமாகும்.

எனது மாணவர்கள் தமது சொந்த முயற்சியால் படைப்புகளை வெளிப்படுத்த வேண்டும். என்னைப் பிரதி செய்பவர்களாகவும் பின்தொடர்பவர்களாகவும் இருக்காமல் என்றுமே கற்றுக் கொண்டிருப்பவர்கள் தான் தேவைப்படுகிறார்கள். ஒரு கலைஞர் சொந்த வழியைக் கண்டுபிடித்து கலை வடிவத்தை உருவாக்க வேண்டும். கல்வி என்பது வாழ்க்கையின் முக்கியமான அம்சம். ஆனால் இலங்கையில் நான்கு அல்லது ஐந்து வருடங்கள் மட்டுமே கல்வி கற்கின்ற பாடத்திட்டங்கள் காணப்படுகின்றன. அவை அனைத்தும் சான்றிதழை எதிர்பார்க்கும் கல்வியே. கலைஞன் எப்போதும் கற்றல் மற்றும் சமூகம் மீதான கரிசனை உள்ளவனாக இருக்க வேண்டும்.

**ஒரு துணிச்சலான காண்பியக் கலைஞராக உங்களது கலை வெளிப்பாடுகளை முன்வைக்கையில் எவ்வாறான அரசியல் தலையீடுகளை எதிர்கொண்டீர்கள்? நீங்கள் சிங்களத் தேசியத்திற்கெதிரானவராக வர்ணிக்கப்படவில்லையா?**

காண்பியக் கலைஞர்களுக்கு இருக்கும் அனுகூலம் என்னவென்றால் அரசியல்வாதிகள் காட்சிப்படுத்தும் படைப்புகளைப் பார்ப்பதில்லை அல்லது அவர்களுக்கு காண்பிய மொழி தெரிவதில்லை. இதனால் நான் சொல்ல வருவதை அவர்களால் புரிந்துகொள்ள முடியாது. 2005 இலிருந்து நடைபெற்ற கலைக்காட்சிகளில் குற்றப் புலனாய்வாளர்கள் அனேகம் வருகை தந்த காட்சி என்னுடையதாக இருந்தது. உதாரணமாக ஒரு குற்றப் புலனாய்வாளர் எனது ஓவியம் பற்றி அறிக்கை செய்வதற்கு வந்திருந்தார். அந்த அறிக்கை அவர்களது சொந்த வார்த்தையில் தான் இருக்குமே தவிர அவை என்னுடைய வார்த்தைகளிளல்ல. அது எனக்கு நன்மையாக முடிந்தது. பாடல் ஒன்று மதத்திற்கோ தேசியவாதிகளுக்கோ போர் வீரர்களுக்கோ எதிரானதாக இருந்தால் அறிக்கை செய்வது சுலபமாக இருக்கக்கூடும். அது குறித்த கலைஞரின் வார்த்தையாகக் கொள்ளப்பட முடியும். ஆனால் எனது படைப்புகளை காண்பிய மொழி அறிந்தவர்களாலேயே விளங்கிக்கொள்ள முடியும். மற்றவர்களுக்கு அவை வெறும் வர்ணங்கள், கோலங்கள், வடிவங்கள், உருக்கள் மட்டுமே.

**நீங்கள் ஆரம்பத்திலிருந்தே அரசாங்கம், இராணுவம், பௌத்த நிறுவனம் போன்றவற்றின் அதிகாரத்துக்கு எதிராக கேள்வியெழுப்பியுள்ளீர்கள். இவ்வாறான பின்னணியில் நீங்கள் எவ்வாறான சவால்களைச் சந்தித்தீர்கள்? குறிப்பாக நீங்கள் பீப்பாய்களைக் கலைக் கூடத்தில் வைத்து இலங்கை அரசினைக் கேள்வி கேட்பதால் ஒரு கலைஞராக நீங்கள் எத்தகைய எதிர்ப்புகளை எதிர்கொண்டீர்கள்?**

நான் கலையை உருவாக்குவதுடன் மட்டுமல்லாமல் எனது கலையைப் பற்றியும் பேசுகின்றேன். அவர்களை அந்தப் பேச்சு காயப்படுத்தும். எனது கலை வன்முறையாளர்களுக்கு எதிரான வன்முறையாக இருக்காது. நான் வன்முறையைக் கலை மூலம் தூண்டவில்லை. நான் இராணுவமயமாக்கலைப் போல அடக்குமுறை செய்யவில்லை. நான் இராணுவமயமாக்கலுக்கு எதிரானவன். அரசாங்கத்தின் வன்முறைக்கு எதிரான கருத்தைக் கொண்டுள்ள மக்கள் உள்ளனர். ஆனால் அதை எப்படி வெளிப்படுத்துவது என்று அவர்களுக்குத் தெரியாது. 2013ஆம் ஆண்டு

கோட்டாபாய ராஜபக்சவின் செயலாளர் எனது கலைக் காட்சியைப் பார்க்க வந்தபோது இந்த மாதிரியான நபரை ஏன் உங்கள் காட்சியறையில் காட்ட அனுமதிக்கிறீர்கள் எனக் கலைக் கூட நிர்வாகத்தினரிடம் கேள்வி எழுப்பியதாகக் கேள்வியுற்றேன். ஆனால் கலைஞர்களாக நாங்கள் எமது கலைப் படைப்புகளைக் காட்சிப்படுத்துகின்றபோது பார்வையாளர்களுக்கு விருப்பமில்லை என்றால் அவர்கள் வரப்போவது இல்லை. இன்னுமொரு விடயம் என்னவென்றால் இலங்கையில் இந்தக் காட்சிகள் நீண்ட நாட்கள் நடைபெறுவதில்லை. அதிகபட்சம் 6–7 நாட்கள். குறுகிய காலத்தில் காட்சிகளை நிகழ்த்தியமையால் அரசாங்கத்தினால் எந்தவொரு எதிர்ப்பும் வரவில்லை என்று கூறுவேன்.

**நீங்கள் கறுப்பு ஜூலையைப் போன்று இறுதிப் போர் பற்றிய தாபனக் கலைத் தொடர் ஒன்றை வருடாந்தம் செய்யலாம் என என்றாவது சிந்தித்ததுண்டா?**

கறுப்பு ஜூலையைப் பற்றிப் படைப்புகள் உருவாக்கினேன் என்றால் அவை எனது கண்களுக்கு முன்னே நிகழ்ந்தவை. எனது எண்ணக்கருக்களை அவ்வாறு வெளிப்படுத்த அண்ணளவாக 10 வருடங்கள் எடுத்தன. அவற்றை வெறுமனே காண்பியமாக்காது நாம் கொண்டிருக்கும் தேசியவாதம் போன்ற எரிச்சலூட்டும் விடயங்களை விமர்சன பூர்வமாகப் பார்க்க வெளிப்படுத்த முயற்சிக்கிறேன். நான் சிங்களப் பெரும்பான்மைச் சமூகத்தின் மத்தியில் தான் வேலை செய்துகொண்டிருக்கிறேன். எனது காட்சியும் கொழும்பில்தான் வைக்கப்பட்டிருக்கின்றது. சிங்கள மக்கள் தமது மனப்போக்கிலுள்ள சிக்கல்களைப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. தமிழ் காண்பியக் கலைஞர்களும் இதுபோல் வேலை செய்ய வேண்டியிருக்கின்றது. போர், போரிற்குப் பின்னரான காலம், இப்போது 'அமைதிக் காலம்" போன்ற வார்த்தைகள் மிக முக்கியம் என்பதை அவதானித்திருக்கிறேன். சிந்தனையைத் தூண்டுதல் என்பது மிக அவசியமான ஒன்று எனக் கருதுகிறேன். நான் ராஜபக்ச ஆட்சியை விமர்சித்ததால் குற்றப் புலனாய்வாளர்களை அனுப்பி என்னைப் பின் தொடரச் செய்தனர். 2015 ஆம் ஆண்டிற்குப் பின்னர் என்னை யாரும் பின் தொடரவில்லை. இவை அரசியல் நிலவரங்களில் தங்கியுள்ளன. சந்திரிக்கா, ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக் காலப் பகுதிகளில் நான் போரை விமர்சித்தமையால் பிரச்சினை எதுவும் ஏற்படவில்லை.

**நீங்கள் ஒரு காட்சிப்படுத்தலுக்காக குறித்த காலப் பகுதிக்குள் ஆண்டு தோறும் படைப்பாக்கம் செய்கிறீர்கள் என்று தெரிகிறது. எனவே குறிப்பிட்ட மாதத்தில் அல்லது காலவரையறைக்குட்பட்டு கலையை உருவாக்குவது தொடர்பான முடிவு அகம் சார்ந்ததா? அல்லது பிற காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றதா?**

அது இருதலைப்பட்சமானது. எனது கறுப்பு ஜூலை கலைக் காட்சிக்காக 1997 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இருந்து 2002 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஜூலை மாதத்திற்கான திகதியைத்தான் பெற முடிந்தது. என்னால் காட்சிக் கூடம் அமைப்பதற்கான இடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் அதன் பிறகு, ஜூலை 23 ஆம் திகதியில் கண்காட்சியை ஒழுங்கு செய்தேன். நான் காட்சியைத் திறக்கும்போது அடுத்த ஆண்டு என்ன செய்வேன் என்பதைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்குகின்றேன். மக்கள், அரசியல்வாதிகள் தவறு செய்கிறார்கள். அதனூடு அவர்கள்தான் படைப்பு செய்வதற்கான கருப்பொருளையும் வழங்குவார்கள். ஆனால் சமூகத்தினால் முன்வைக்கப்படும் கேள்விகளுக்கு படைப்புகளுக்கூடாக பதிலளிக்கின்றேன். அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து நான் காத்திருக்கிறேன். நான் எதிர்வினையாற்ற வேண்டிய சிக்கல்களைக் கொண்ட உலகின் தொகுப்பைப் படைப்புகள் மூலம் உருவாக்குகிறேன். சுற்றியுள்ள மக்கள் 13ஆவது திருத்தம்,

அதிகாரப் பரவலாக்கம், ICCPR (International Covenant on Civil and Political Rights) மற்றும் மகாசங்கம் போன்றவற்றுக்கு எவ்வாறு பதிலளிக்கின்றார்கள் என்பதைப் பார்த்து வருகின்றேன். இவ்வாறு அரசாங்கத்திடமிருந்து வரும் பௌத்த மயமாக்கல் பற்றிய பதில்கள் கூட கலையில் கருவாகப் பயன்படுத்தலாம். வேலை செய்ய நிறைய விடயங்கள் இருக்கின்றன. தொடர்புபட்ட விடயங்களை அணுகுதலே கலையாக்கச் செயல்முறை ஆகும்.

எனவே பாடுபொருட்களை ஜுலைக்குக் காட்சி செய்யும் பொருட்டுத் தெரிவு செய்கிறேன். ஜனவரியில் அவற்றைத் தேர்ந்தெடுத்து முழுமையாக வேலை செய்வதுண்டு, சில நேரங்களில் கடைசி நாள்வரை வேலை செய்ய வேண்டியிருக்கும். ஆனால் எப்படியும் கண்காட்சி நெருங்கும் போதும் வேலை செய்வேன். எப்படியிருந்தாலும் கடந்த காலத்திற்கு மட்டுமன்றி இப்போது என்ன நடக்கிறது என்பதற்குப் படைப்பினூடு பதிலளிக்கிறேன். இப்போது என்னுடைய படைப்புகளை நீங்கள் மீளப் பார்க்கும் போது சில தொடர்புகளை அவை கொண்டிருக்க வேண்டும் என விரும்புகிறேன். நான் தற்காலிகமான விடயங்களுக்கு எதிர்வினையாற்றும் போது அவை தற்காலிகக் கலையாகத்தானிருக்கும், அது சமகாலக் கலையல்ல.

**இலங்கையில் பல்வேறு கருத்தாடல்கள் உள்ளன. தமிழர்கள், சிங்களவர்கள், கிழக்கில் குறிப்பாக முஸ்லிம்கள் என்று தனித்தனியான அரசியல்-கலாசாரங்களடங்கிய பல சித்தாந்தங்களைக் கொண்டுள்ளனர். ஒரு கலைஞராக இலங்கையைப் பற்றிய உங்களுடைய முழுப் பார்வை மற்றும் இலட்சியம் என்ன?**

அமைதியான நாடாக இலங்கையை எப்படி உருவாக்குவது என்பது தான் இப்போதைய பிரச்சனை. நீங்கள் சிங்கள இலங்கையர், தமிழ் இலங்கையர், முஸ்லிம்கள் இலங்கையர் என்று பேதம் காட்டாது எந்த வகையான நபரைப் பார்க்கிறீர்கள் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அப்போது நீங்கள் எங்கிருக்கிறீர்கள் என்று சொல்வீர்கள். உங்கள் இனத்தை முதலில் சொன்ன பின்னரே நாடு என்கிறீர்கள். எனவே உங்களை எப்படிக் காட்டப் போகிறீர்கள் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். முக்கிய விடயம் என்னவென்றால் நீங்கள் மனிதராக இருக்க வேண்டும். நீங்கள் மனிதராக இல்லாவிட்டால் உங்களுக்கு எந்த நாட்டிலும் இடமில்லை. முதலில் மனித உரிமைகளை மதிக்க வேண்டும். உங்கள் உரிமைகள் மற்றவருக்கும் உண்டு. ஒருவரையொருவர் மதிக்கவும் அன்பு செலுத்துவதும் முதன்மையான பண்பாகும். மக்களைப் பிரித்தாளுவதற்கு அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது. இங்கே அதுதான் பிரச்சனை. அதனால்தான் மக்கள் அதிக அதிகாரத்தைப் பெற வேண்டும். முதலில் மக்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். அவர்கள்தான் அரசாங்கம். சக்தி வாய்ந்த மனிதர்கள், சிந்தனையுள்ளவர்கள் ஆவர். அதை ஒன்றாகக் கட்டியெழுப்பிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். இல்லையெனில் நீங்கள் அரசாங்கத்தை, கட்சிகளை, பின்பற்றுபவர்களை உருவாக்க முடியும். நான் எதிர்பார்க்கும் இலங்கை என்பது மக்களின் ஒப்பற்ற சக்தியே.

**ஒரு காண்பியக் கலைஞரான நீங்கள் செயற்பாட்டாளராகவும் இருப்பதன் அனுபவத்தினைப் பகிர்ந்துகொள்ள முடியுமா?**

நான் சமூக செயற்பாடுகளில் பங்கெடுக்கும் அதேவேளை வன்முறையை விரும்புபவனல்ல. எங்கு வன்முறை நிகழ்கிறதோ அங்கு நிற்க விரும்பமாட்டேன். வன்முறை எதற்கும் தீர்வாகாது என்று நினைக்கிறேன். வன்முறை வழிகள் மிகச் சிக்கல் வாய்ந்தவை. வன்முறை ஒரு பிரச்சனையைத்

தீர்ப்பதை விட அதிகரிக்கிறது. இவ்வாறான தருணங்களில் அமைதியாக இருந்து கொண்டே எதிர்ப்பு வெளிப்படுத்த முடியும் என்பதால் அமைதியாக இருக்கின்றேன். செயற்பாட்டுவாதம் பல வகைப்படலாம், நீங்கள் உங்களது வேலையை நேர்மையாகச் செய்துகொண்டிருப்பதே ஒரு செயற்பாடு தான். இது சமூகத்தின் ஒரு பகுதியும் கூட. நீங்கள் சமூகத்திற்காக உழைக்கிறீர்கள் என்பது உங்களது செயற்பாட்டின் ஒரு பகுதியாகும். அது தனிப்பட்ட உணர்வு அல்ல நீங்கள் கலைஞராக பொதுவான சமூக உணர்வுடன் செயற்பட வேண்டியது கட்டாயமாகும். கலை உருவாக்கத்தின் போது ஒரு கலைஞராக என்னை ஈடுபடுத்திக் கொள்கிறேன். வேறு தொழில்கள் இல்லாத போது கலைப் படைப்புகளை விற்று வாழவேண்டியேற்படுகிறது.

இது இக்கட்டான நிலை. அதே நேரத்தில் ஒரு சுதந்திரமான கலைஞராகவும் வாழ வேண்டும். முதலில் நீங்கள் உங்களை இனங்கண்டு உங்களுக்குள்ளிருக்கும் கலைஞரை வெளிக்கொண்டு வரவேண்டும். இல்லையெனில் நீங்கள் சாதாரண நபராக ஆகிவிடுவீர்கள். மனிதனுக்கு சமூகம் தேவை. எனவே உங்களுக்கும் மக்கள் தேவை. நீங்கள் ஒன்று மக்களைச் சேர்ந்தவராக இருப்பீர்கள் அல்லது மக்கள் உங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். எனவே நாம் முதலில் நமது கலைப்படைப்பை உருவாக்கலாம். பின் மற்றவர்களைச் சிந்திக்க வைக்கலாம். இலங்கைச் சமூகத்தில் மக்கள் சிந்திப்பதில்லை என்பது நமது கல்வி முறையில் காணப்படும் குறை. மக்களைச் சிந்திக்க வைக்கத்தக்க கலைப் படைப்புகளை உருவாக்க வேண்டும்.

**அரகலய பற்றி உங்கள் கருத்து என்ன?**

மே 9 ஆம் திகதி வரை அரகலயவின் முதல் கட்டமாகக் கருதப்படும் கால கட்டத்தை நான் விரும்புகிறேன். அவ்வேளை வெனிஸ் கண்காட்சிக்குச் சென்றமையால் பௌதீக ரீதியாக நான் இலங்கையிலிருக்கவில்லை. மே 9 ஆம் திகதிக்குப் பிறகு அரசியல் கட்சிகளால் அரகலயவின் சாரம் கெட்டுப் போய்விட்டது என்று நினைக்கிறேன். அரசியல் கட்சிகள் அடுக்குக்குள் ஊடுருவி ஒழுங்கற்ற அடுக்கில் சிலவற்றை உரிமையாக்க முயன்றனர். உரிமைக்கு எதிராக பலர் போராடுகிறார்கள். உண்மையான அரகலயவில் ஏழை மக்கள் முதல் பணக்காரர் வரை பல்வேறுபட்டவர்கள் பங்கு கொண்டனர். முஸ்லிம்கள் இருக்குமிடத்தில் சிங்களவர்கள் இருந்தனர். அங்கு சில தமிழர்களும் பங்கு கொண்டனர். ஐக்கிய தேசியக் கட்சியினர் போராட்டங்களை ரசித்துக் கொண்டிருந்தனர். அங்கு சடங்குகள் மட்டுமே நிகழ்ந்தேறின. அராஜக நிலைமையை மாற்ற வேண்டும் என்றுதான் போராட்டம் நிகழ்த்தப்பட்டது. எனக்குத் தெரிந்து அனைத்து வகையான அரகலய மக்கள் போராட்டமும் கொள்கையற்று அதிகாரத்தினால் அடக்கப்பட்டது என்பேன்.

**உங்கள் கலை மற்றும் காண்பிய வேலைப்பாடுகளை அவதானிப்பதன் மூலம் வெளிப்படுத்தும் அரசியலைப் புரிந்துகொள்கின்றேன். பீப்பாயை வைத்து அதிகாரம், இராணுவமயமாக்கல் என்பவற்றுக்கெதிராக கலை மூலம் குரல் எழுப்பியுள்ளீர்கள். குறிப்பாக பயன்படுத்தப்பட்ட பரலிசம் காலப்போக்கில் கூர்ப்படைந்ததையும் அவதானிக்க முடிகின்றது. உங்கள் கலை ஒடுக்கப்பட்டவர்களுக்கும் அரச அமைப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்குமானதாக இருக்கிறது. அரசாங்கத்திற்காகவோ அல்லது அவர்களை உற்சாகப்படுத்துவதற்காகவோ அல்லாமல் நீங்கள் கலையை மக்களுக்காகச் செய்கின்றீர்கள் எனும் அடிப்படையில் உங்கள் கலை உள்ளூர் மக்களுக்குச் சென்றடைகின்றதா?**

ஆம். எனக்காகவும் மக்களுக்காகவும் கலையை உருவாக்குகின்றேன். "தேனீ தனக்காகத்தான் தேனை உருவாக்குகிறது. விற்பனைக்காக அல்ல" என்று கார்ல் மார்க்ஸ் சொல்வது போல் நான்

கலை செய்யவில்லை என்றால் நான் கலைஞன் இல்லை. நான் இறந்த கலைஞனாக இருப்பேன். எனவே நீங்கள் உங்களை உயிர்ப்போடு வைத்துக்கொள்வதற்குக் கலை உருவாக்கப்பட வேண்டும். அந்தக் கலைகளை உருவாக்க நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளீர்கள். தனிப்பட்ட முறையில் சிந்தனைகள் அனைத்தும் எமக்குரியவை. பார்வையாளர்களது மனம் அடிப்படைக் காண்பியக் கூறுகளை உள்வாங்கிக் கொள்வது. இதனை காண்பியக் கலைஞர் தனக்குச் சாதகமாக்கிக் கொள்வதனூடு அதிகளவு மக்களின் கவனத்தை எடுத்துக்கொள்ள முடியும். நான் உருவாக்கும் கலை நான் மக்களுடன் தொடர்பைப் பேணிக்கொள்ளும் மொழி என்றே கருதுகிறேன். இதனாலேயே அதை மீண்டும் கட்டமைக்கவும் அதை மீண்டும் மறு பரிசோதனை செய்யவும் அதை மீண்டும் மீண்டும் காட்சிப்படுத்திக் கொள்ளவும் ஆர்வமாக இருக்கிறேன்.

**உங்களது பரலிசம் அதாவது பரல்களைக் கொண்டு செய்கின்ற கலைப்படைப்புகள் சிலவற்றை முன்னால் அடுக்கி புகைப்படம் எடுக்கின்றனர். வெவ்வேறு இடங்களில் வைக்கப்பட்டாலும் கொழும்பு நகரத்தில் வைக்கும் போது சாதாரண பாதுகாப்புப் படைகளின் பீப்பாய்களும் காணப்படும். உங்களுடைய கலைப் படைப்பு காணப்படும் பின்னணி தெரிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள் ஆனால் சாதாரண மக்கள் அதனை எவ்வாறு புரிந்து கொள்வார்கள்?**

பொதுமக்களுக்கு அந்தப் பிரச்சனை இல்லை. கலைப் படைப்பை வாங்க வருபவர்கள் எவ்வாறு பீப்பாய்களை வாங்குவது என நினைக்கிறார்கள். இவற்றில் ஒன்றும் இல்லை என்கிறார்கள். ஜே.வி.பி மாதிரியான ஆட்கள் இது கலையே இல்லை அப்படியானால் ஒரு உலக்கையும், உரலையும் காட்சிக் கூடத்தில் வைத்து விட்டுக் கலை எனலாமா? எனக் கேள்வி கேட்கின்றனர். சில நேரம் சில பேர் தம்மை வரவேற்கவில்லை, அழைப்பு விடுக்கவில்லை எனக் குறை கூறுகின்றனர். ஆனால் சாதாரண மக்கள் அதனைப் புரிந்து கொள்வார்கள் என நினைக்கிறேன்.

**உங்களது கலைப்படைப்புகளை அரசியற் கலை எனக் கூறலாமா?**

ஆம், அரசியல் இல்லாது கலை இல்லை. இரண்டும் ஒரு விடயம் தான். நான் ஆட்சி அரசியலுக்குத் துலக்கம் காட்டுகிறேன் எனக் கூற முடியாது. அரசியல் நிலவரங்களுக்கும் அதனுடன் இணைந்த விடயங்களுக்கும் எதிர்வினையாற்றுகிறேன். இது உளவியல் மற்றும் தனி நபர் விடயமல்ல. சமூக விடயம், அரசியல், கடந்தகால, சமகால விடயங்கள் என எனது பாடுபொருட்கள் அமைகின்றன.

*(2023இல் இலங்கை கலை கட்டடக்கலை வடிவமைப்பிற்கான ஆவணக் காப்பகத்தில் இடம்பெற்ற சந்திரகுப்த தேனுவரவின் உரையினதும் அதன் பின்னரான அவருடனான நேர்காணலினதும் தொகுப்பு ஆகும்.)*